(ஒன்பதாவது பாராளுமன்றம் - இரண்டாவது கூட்டத்தொடர்)

இல. 2(4).]

# பாராளுமன்றம்

## 2 ஆம் ஒழுங்குப் புத்தகத்துக்கான அனுபந்தம்

## 2022 யூலை 07 வியாழக்கிழமை வெளியிடப்பட்டது

## 2022 யூலை 19, செவ்வாய்க்கிழமை

## பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*

சமூகப் பாதுகாப்பு உதவுதொகை அறவீட்டுச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.

---

## எழுத்துமூல விடைக்கான வினாக்கள்

**(2022, யூலை 21, வியாழக்கிழமை)**

3451/2022

கௌரவ விஜித ஹேரத்,— பிரதம அமைச்சர் மற்றும் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2018 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரை சுற்றுலாத்துறை சார்ந்த சேவை வழங்குநர்களின் வாகனங்களுக்கு வழங்கப்பட்டுள்ள குத்தகை வசதிகளின் எண்ணிக்கை;

(ii) அவற்றின் நிதிசார் பெறுமதி;

(iii) அக்குத்தகை வசதிகளின் எண்ணிக்கையில் இலங்கை மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட தவணைக்கட்டணம் செலுத்தாமல் இருப்பதற்கான சலுகைக் காலம் வழங்கப்பட்டுள்ள குத்தகை வசதிகளின் எண்ணிக்கை;

(iv) அக்குத்தகை வசதிகள் எண்ணிக்கையின் நிதிப் பெறுமதி, ஆரம்பத் தொகை மற்றும் வட்டித் தொகை;

ஒவ்வொரு அரச வங்கிக்கும் ஏற்ப தனித்தனியே எவ்வளவு என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) 2018 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரை சுற்றுலாத்துறை சார்ந்த சேவை வழங்குநர்களுக்காக வழங்கப்பட்டுள்ள ஒரு மில்லியன் ரூபாய் மற்றும் அதற்குக் குறைவான கடன் வசதிகளின் எண்ணிக்கை;

(ii) அவற்றின் நிதிசார் பெறுமதி;

(iii) அக்கடன் வசதிகளின் எண்ணிக்கையில் இலங்கை மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட தவணைக்கட்டணம் செலுத்தாமல் இருப்பதற்கான சலுகைக் காலம் வழங்கப்பட்டுள்ள கடன் வசதிகளின் எண்ணிக்கை;

(iv) அக்கடன் வசதிகள் எண்ணிக்கையின் நிதிப் பெறுமதி, ஆரம்பத் தொகை மற்றும் வட்டித் தொகை;

ஒவ்வொரு அரச வங்கிக்கும் ஏற்ப தனித்தனியே எவ்வளவு என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

---

## 2022 ஆகஸ்ட் 09, செவ்வாய்க்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

2573/2022

கௌரவ துஷார இந்துனில் அமரசேன,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் இது வரை இலங்கை பாடசாலை மாணவர்களின் போசாக்கின்மை விகிதமானது ஒவ்வொரு வருடத்திற்கும் ஏற்ப தனித் தனியே யாதென்பதையும்;

(ii) பாடசாலை மாணவர்களின் போசாக்கின்மையை இல்லாதொழிப்பதற்காக அமைச்சினால் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2579/2022

கௌரவ பீ. வை. ஜீ. ரத்னசேக்கர,— நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் தற்போது இயங்கிவருகின்ற நீதிமன்றங்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) அந்த நீதிமன்றங்களில் இன்றளவில் விசாரணை செய்யப்பட்டுவருகின்ற வழக்குகளின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(iii) அவ்வழக்குகளுக்கென எடுக்கப்பட்டுள்ள காலம் தொடர்பில் பகுப்பாய்வொன்றைச் சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(iv) அதிக காலம் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ள வழக்குகளை துரிதமாகத் தீர்ப்பதற்கு கடைப்பிடிக்க எதிர்பார்த்துள்ள முறையியல் யாது என்பதையும்;

அவர் இச்சபையில் தெரிவிப்பாரா?

(ஆ) (i) தடை உத்தரவுகள் தொடர்பில் துரிதமாக ஓர் இறுதியான முடிவை எட்டுவதற்கான முறையியல் தயாரிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) சிறு வழக்குகளை விசாரணை செய்வதற்காக நடைமுறைப்படுத்தப்படுகின்ற மத்தியஸ்த சபை முறையை மேலும் விஸ்தரித்து அதனை வினைத்திறன் மிக்கதாக மாற்றியமைப்பதற்கான முறையியல் தயாரிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

அவர் இச்சபையில் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2634/2022

கௌரவ (டாக்டர்) கவிந்த ஹேஷான் ஜயவர்தன,— முதலீட்டு மேம்பாட்டு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கொழும்பு, துறைமுக நகர கருத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டதன் நோக்கங்கள் யாவை;

(ii) மேற்படி கருத்திட்டத்துக்கு இதுவரையில் கிடைக்கப்பெற்றுள்ள நேரடி மற்றும் ஏனைய வெளிநாட்டு முதலீடுகளின் எண்ணிக்கை யாது;

(iii) மேற்படி முதலீடுகளின் பெறுமதி யாது;

(iv) இலங்கையின் எதிர்கால பொருளாதார அபிவிருத்திக்காக குறிப்பிட்ட கருத்திட்டத்தைப் பயன்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ள விதம் யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2652/2022

கௌரவ ரஊப் ஹகீம்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தேசிய மற்றும் மாகாண பாடசாலைகளில் மண்சரிவு அபாயம் காரணமாக இடிந்து விழும் அபாயத்தில் உள்ள பாடசாலைக் கட்டிடங்களை அடையாளங் காண்பதற்காக கணக்கெடுப்பொன்று நடத்தப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனின், கண்டி, மாத்தளை, நுவரெலியா, பதுளை, குருநாகல், இரத்தினபுரி, கேகாலை மற்றும் மாத்தறை ஆகிய ஒவ்வொரு மாவட்டத்திலும் இவ்வாறு அடையாளங் காணப்பட்ட கட்டிடங்களைக் கொண்ட பாடசாலைகள் தனித்தனியே யாவை என்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு கட்டிடத்தையும் புனரமைப்பதற்கென மதிப்பீடு செய்யப்பட்டுள்ள தொகை தனித்தனியே எவ்வளவென்பதையும்;

(iv) மேற்படி ஒவ்வொரு கட்டிடத்தையும் புனரமைப்பதற்காக அல்லது புதிய கட்டிடமொன்றை நிர்மாணிப்பதற்காக ஒதுக்கப்படும் தொகை தனித்தனியே எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2656/2022

கௌரவ மயந்த திசாநாயக்க,— பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கண்டி மாவட்டத்தில் அமைந்துள்ள பொலிஸ் நிலையங்கள் பேணிவரப்படுகின்ற கட்டிடங்கள் பல வருட காலம் பழைமைவாய்ந்தவை என்பதையும்;

(ii) மேற்படி பொலிஸ் நிலையங்களின் விடுதிகளைப் பயன்படுத்துவது மிகவும் கடினமாக உள்ளது என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி கட்டிடங்களை நவீனமயப்படுத்த மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி பொலிஸ் நிலையங்களிலிருந்து சேவைகளைப் பெற்றுக்கொள்ள வருகைதருகின்ற பொது மக்களுக்கு முறையான சேவையை வழங்க எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2687/2022

கௌரவ ஜே.சீ. அலவத்துவல,— பிரதம அமைச்சர் மற்றும் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அண்மையில் இலங்கையில் பதிவாகிய ஒவ்வொரு சமையல் எரிவாயு விபத்தும் இடம்பெற்ற இடத்தின் பெயர், தொடர்புடைய பொலிஸ் அதிகாரப் பிரிவின் பெயர், நிருவாக மாவட்டத்தின் பெயர், மேற்படி விபத்து காரணமாக ஏற்பட்ட சேதம் மற்றும் நிதிசார் நட்டம் என்பன தனித்தனியே யாவை என்பதையும்;

(ii) மேற்படி சமையல் எரிவாயு விபத்துக்கள் காரணமாக ஏற்பட்ட உயிர்ச் சேதங்கள், காயங்கள் மற்றும் சொத்துக்களுக்கான சேதங்கள் தொடர்பில் நட்டஈடு செலுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(iii) ஆமெனில், மேலே குறிப்பிடப்பட்ட ஒவ்வொரு விபத்துக்குமாக செலுத்த எதிர்பார்க்கும் நட்டஈட்டுத் தொகை வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(iv) எதிர்காலத்தில் இவ்வாறான விபத்துக்கள் இடம்பெறுவதைத் தடுப்பதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2751/2022

கௌரவ சாள்ஸ் நிர்மலநாதன்,— வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) இலங்கையில் நிலவிய போர்ச் சூழல் காரணமாக வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் வசித்த ஆயிரக்கணக்கான தமிழர்கள் இந்தியாவிற்கு இடம்பெயர்ந்து முகாம்களிலும் முகாம்களுக்கு வெளியே பிற இடங்களிலும் தங்கியுள்ளார்கள் என்பதையும்;

(ii) தற்போது போர் நிறைவடைந்துள்ள போதிலும், மேற்படி குழுவைச் சேர்ந்த சுமார் 100,000 பேருக்கு இலங்கைக்கு மீண்டும் வருகைதர இயலாதுள்ளதென்பதையும்;

(iii) அம்மக்களில் முகாம்களுக்கு வெளியே பிற இடங்களில் தங்கியுள்ள பலர், இந்திய அரசாங்கத்தால் வீசா வழங்கப்படாததால் இலங்கைக்குத் திரும்பும் போது, இவர்கள் இந்தியாவில் தங்கியிருந்த முழுக் காலத்திற்குமான வீசா கட்டணத்தைச் செலுத்த நேரிட்டுள்ளதென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) மேற்படி மக்களை மீண்டும் இலங்கைக்கு அழைத்து வருவதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதை அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2774/2022

கௌரவ திஸ்ஸ அத்தநாயக்க,— பிரதம அமைச்சர் மற்றும் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் கணக்கு அறிக்கைகளின் படி 2019 யூன் 30 ஆம் திகதியில் வரி செலுத்துபவர்களினால் செலுத்தத் தவறியுள்ள நிலுவை வரித் தொகை தோராயமாக 4,171,558 மில்லியன் ரூபாவாகும் என்பதையும்;

(ii) இதில் வரி நிலுவைகளில் தவறான கணக்குப் பதிவினால் ஏற்பட்டுள்ள ரூபா 3500 மில்லியன்களுக்கும் அதிகமான நிலுவை வரியைத் தீர்ப்பதற்கு உரிய நேரத்தில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை என்பதையும்;

(iii) மொத்த நிலுவை வரியில் 90% கும் அதிகமான தொகை பெறுமதி சேர் வரி மற்றும் வருமான வரி என்பவற்றைக் கொண்டமைந்துள்ளது என்பதையும்;

(iv) உள்நாட்டு இறைவரித் திணைக்களம் நிலுவை வரி வருமானத்தை அறவிடுவதற்கு/தீர்ப்பதற்கு உரிய நேரத்தில் நடவடிக்கை மேற்கொள்ளவில்லை என்பதையும்;

(v) இதன் மூலம் மேற்படி திணைக்களத்தின் செயற்றிறனின்மை தெளிவாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது என்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) அரசாங்கம் இழந்துள்ள நிலுவை வரி வருமானத்தை அறவிடுவதற்கு மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(ii) வரி செலுத்துவதைத் தட்டிக்கழிக்கும் நபர்கள் தொடர்பில் மேற்கொள்ளப்படவுள்ள சட்ட நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iii) திணைக்களத்தின் செயற்றிறனற்ற உத்தியோகத்தர்கள் தொடர்பில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2784/2022

கௌரவ சிவஞானம் சிறீதரன்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பதில் கடமையாற்றுதல் அடிப்படையில் நாடெங்கிலும் அமைந்துள்ள பாடசாலைகளில் பணியாற்றுகின்ற அதிபர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) அவர்கள் மத்தியில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் பணியாற்றுகின்ற அதிபர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) பதில் கடமையாற்றுதல் அடிப்படையில் நியமனங்கள் வழங்கப்பட்டுள்ள அதிபர்களுக்கு சம்பள அதிகரிப்புகள், பதவி உயர்வுகள் மற்றும் இடமாற்றங்கள் வழங்கப்படாமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி அதிபர்களுக்கு சம்பள அதிகரிப்புகள், பதவி உயர்வுகள் மற்றும் இடமாற்றங்கள் வழங்கப்படும் திகதி யாதென்பதையும்;

(iii) பொதுச் செயன்முறையின் கீழ் பதில் கடமையாற்றும் அடிப்படையில் பணியாற்றுகின்ற அதிபர்கள் நிரந்தரச் சேவைக்குள் உள்ளீர்க்கப்படுகின்ற போதிலும் தற்பொழுது இவர்களை நிரந்தரச் சேவைக்குள் உள்ளீர்க்கப்படாமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(iv) மேற்படி அதிபர்களை நிரந்தரச் சேவைக்குள் உள்ளீர்க்கப்படும் திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3056/2022

கௌரவ அஜித் மான்னப்பெரும,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கம்பஹா மாவட்டத்திலுள்ள தேசிய பாடசாலைகளின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) அவற்றின் பெயர்கள் யாவையென்பதையும்;

(iii) “சுபீட்சத்தின் நோக்கு” வேலைத்திட்டத்தின் கீழ் தேசிய பாடசாலைகளாக மாற்றப்பட்ட பாடசாலைகளின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(iv) அவற்றின் பெயர்கள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி (அ) (iv) இல் குறிப்பிடப்பட்டுள்ள பாடசாலைகளைத் தெரிவு செய்கையில் பின்பற்றப்பட்ட வழிமுறை யாதென்பதையும்;

(ii) தேசிய பாடசாலைகளாக மாற்றப்படும் பாடசாலைகளுக்கு வழங்கப்படும் வசதிகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

## 2022 ஆகஸ்ட் 10, புதன்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

2838/2022

கௌரவ சாணக்கியன் ராஜபுத்திரன் இராசமாணிக்கம்,— கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வாழைச்சேனை கடதாசி தொழிற்சாலையின் தற்போதைய நிலைமை யாது என்பதையும்;

(ii) குறித்த தொழிற்சாலையில் உற்பத்தி நடவடிக்கைகளை மீள ஆரம்பிப்பதற்காக எடுக்கப்படும் நடவடிக்கை யாதென்பதையும்;

(iii) அதற்கென முதலீடு செய்யப்பட்ட தொகை மற்றும் திகதியையும்;

(iv) அதன் மூலம் உருவாக்கப்படும் தொழில் வாய்ப்புகளின் எண்ணிக்கையையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) மேற்படி தொழிற்சாலை தொடர்பில் ஊழல் மற்றும் மோசடி இடம்பெறுவதை அறிவாரா என்பதையும் அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2972/2022

கௌரவ ஹெக்டர் அப்புஹாமி,— வெளிநாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சைப்ரஸ் குடியரசில் தாபிக்கப்பட்டிருந்த இலங்கை கொன்சியுலர் ஜெனரல் அலுவலகம் மூடப்பட்டுள்ளது என்பதை அறிவாரா என்பதையும்;

(ii) ஆமெனில், அதற்கு ஏதுவான காரணங்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி அலுவலகம் மூடப்பட்டதன் காரணமாக சைப்ரஸ் குடியரசில் பணிபுரியும் இலங்கை ஊழியர்களின் நலன்புரி நடவடிக்கைகளுக்கு கடும் தடைகள் ஏற்பட்டுள்ளன என்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(iv) ஆமெனில், இது தொடர்பில் அமைச்சு மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3078/2022

கௌரவ அசோக்க பிரியந்த,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபையின் கீழ் புத்தளம் மாவட்டத்தில் தாபிக்கப்பட்டுள்ள தொழிற்பயிற்சி நிலையங்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) மேற்படி நிலையங்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி நிலையங்களில் நடாத்தப்படும் தொழிற்பயிற்சிப் பாடநெறிகள் யாவை என்பதையும்;

(iv) புத்தளம் மாவட்டத்திலுள்ள தொழிற்பயிற்சி நிலையங்களை மேலும் அபிவிருத்தி செய்வதற்கு எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3085/2022

கௌரவ தவராஜா கலை அரசன்,— நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) அம்பாறை மாவட்டத்திலுள்ள —

(i) வீடுகள் தேவைப்படும் குடும்பங்களின் எண்ணிக்கை;

(ii) தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் உதவியின் கீழ் தனியார் காணிகளில் பகுதியளவில் நிர்மாணிக்கப்பட்டுள்ள வீடுகளின் எண்ணிக்கை;

(iii) மாதிரிக் கிராமங்களாக நிர்மாணிக்கப்பட்டுள்ள வீடமைப்புக் கருத்திட்டங்களின் எண்ணிக்கை;

எத்தனை என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) 2018 ஆம் ஆண்டு முதல் 2020 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையினால் திருக்கோவில், நாவிதன்வெளி, ஆலையடிவேம்பு மற்றும் சம்மாந்துறை ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளில் யுத்தத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்காக நடைமுறைப்படுத்தப்பட்ட வீடமைப்புத் திட்டத்திற்கான மிகுதி நிதித் தொகை வழங்கப்படும் திகதி யாதென்பதையும்;

(ii) அத் திட்டம் நிறைவு செய்யப்படும் திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3155/2022

கௌரவ அநுர திசாநாயக்க,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பதவிநிலை தாதி திருமதி வசந்தா மல்லவஆராச்சி அவர்கள் சீமாட்டி றிஜ்வே சிறுவர் வைத்தியசாலையில் சேவையாற்றி 1985.04.01 ஆம் திகதி ஓய்வுபெற்றுள்ளார் என்பதையும்;

(ii) ஓய்வூதிய சுற்றறிக்கை 2/2012 இற்கு அமைவாக தபுதாரர், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு பங்களிப்புச் செய்வதற்காக 2012.12.18ஆம் திகதி விண்ணபப்படிவங்களை மேற்குறிப்பிட்ட வைத்தியசாலைக்குச் சமர்ப்பித்துள்ளார் என்பதையும்;

(iii) அவ்விண்ணபப்படிவங்கள் கிடைக்கப்பெற்றமை வைத்தியசாலைப் பணிப்பாளரின் இலக்கம் EBB/PP/හෙදි/ඊ.ඕ. மற்றும் 2013.01.19 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது என்பதையும்;

(iv) பாணந்துறை பிரதேச செயலகத்தில் இருந்த ஓய்வூதியக் கோப்பு, ஓய்வூதியத் திணைக்களத்திற்கு கொண்டுவரப்பட்டது என்பதையும்;

(v) அப்பெண்மணி 2017.12.20 ஆம் திகதி இறந்ததன் பின்னர் அவருடைய கணவன் திரு. தயாபால ஹல்பே கமகே அவர்கள் தபுதாரர், அநாதைகள் ஓய்வூதியத்தைப் பெற்றுக்கொள்வதற்கு உரிய ஆவணங்களை ஓய்வூதியத் திணைக்களத்திற்குச் சமர்ப்பித்துள்ள போதிலும் இதுவரை அது கிடைக்கப்பெறவில்லை என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) சுகாதார சேவைகள் திணைக்களத்தினால் இழைக்கப்பட்ட தவறு காரணமாக திருமதி வசந்தாவின் தபுதாரர், அநாதைகள் ஓய்வூதியத்தைச் செலுத்தாமை தவறு என்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(ii) அவ் ஓய்வூதியத்தைச் செலுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(iii) ஆமெனில், அத்திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3157/2022

கௌரவ உதயன கிரிந்திகொட,— முதலீட்டு மேம்பாட்டு அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 1980 ஆம் ஆண்டு முதல் இதுவரை வெளிநாட்டுப் பிரசாவுரிமையைப் பெற்றுக் கொண்டுள்ள இலங்கையர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) இவர்களுக்கு மத்தியில் இரட்டைப் பிரசாவுரிமையைப் பெற்றுக்கொண்டுள்ள இலங்கையர்கள் தொடர்பான தகவல்கள் உள்ளனவா என்பதையும்;

(iii) ஆமெனில், அவர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(iv) இலங்கையரொருவர் வெளிநாட்டுப் பிரசாவுரிமையைப் பெறுகையில் இலங்கை அரசாங்கத்தை விழிப்பூட்டுவதற்காக மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) 1989 ஆம் ஆண்டு முதல் இதுவரை இலங்கைப் பாராளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்திய வெளிநாட்டுப் பிரசாவுரிமையை மாத்திரம் கொண்டிருந்த உறுப்பினர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) அவர்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iii) 1989 ஆம் ஆண்டு முதல் இதுவரை இலங்கைப் பாராளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்திய இரட்டைப் பிரசாவுரிமையைக் கொண்டிருந்த உறுப்பினர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(iv) அவர்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

3175/2022

கௌரவ திலிப் வெதஆரச்சி,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) “அண்மித்த பாடசாலை சிறந்த பாடசாலை” நிகழ்ச்சித்திட்டத்திற்காக 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரை ஒதுக்கப்பட்ட நிதி எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்குறிப்பிட்ட நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் அபிவிருத்தி செய்யப்பட்ட பாடசாலைகளின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் அபிவிருத்தி செய்யப்பட்ட தேசிய பாடசாலைகள் மற்றும் மாகாணசபை பாடசாலைகளின் எண்ணிக்கை;

(ii) அவற்றுள் பணிகள் நிறைவு செய்யப்பட்ட மற்றும் நிறைவு செய்யப்படாத பாடசாலைகளின் எண்ணிக்கை;

வெவ்வேறாக யாதென்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3189/2022

கௌரவ சிவநேசதுரை சந்திரகாந்தன்,— சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள காணி சீர்திருத்த ஆணைக்குழுவுக்கு உரித்தான காணிகளின் மொத்த விஸ்தீரணத்தையும்;

(ii) மேற்படி காணிகள் அமைந்துள்ள இடங்களையும்;

அவர் இச்சபைக்கு தெரிவிப்பாரா?

(ஆ) (i) மட்டக்களப்பு மாவட்டத்தில் வாழுகின்ற மக்களுக்கு மத்தியில் தற்போதைய அரசாங்கத்தினால் பகிர்ந்தளிக்கப்பட்ட ஆணைக்குழுவுக்கு உரித்தான காணிகளின் மொத்த விஸ்தீரணத்தையும்;

(ii) மேற்படி காணிகள் அமைந்துள்ள இடங்களையும்;

(iii) மேற்படி காணிகள் பகிர்ந்தளிக்கப்பட்டதற்கான நோக்கங்களையும்;

அவர் இச்சபைக்கு தெரிவிப்பாரா?

(இ) (i) காணி சீர்திருத்த ஆணைக்குழுவுக்கு உரித்தான காணிகள் பலவந்தமாக கையகப்படுத்தப்படுகின்றனவா என்பதையும்;

(ii) அவ்வாறெனில், அது தொடர்பாக மேற்கொள்ளப்பட்டுள்ள சட்ட நடவடிக்கைகளையும்;

(iii) ஆணைக்குழுவுக்கு உரித்தான காணிகளை பகிர்ந்தளிப்பதற்காக புதிய முறைமை ஒன்று உருவாக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) அவ்வாறெனில், மேற்படி முறைமையின் விபரங்களையும்;

அவர் மேலும் இச்சபைக்கு தெரிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

---

## 2022 ஆகஸ்ட் 12, வெள்ளிக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

12/2022

கௌரவ கயந்த கருணாதிலக்க,— முதலீட்டு மேம்பாட்டு அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2015 தொடக்கம் 2020 ஆம் ஆண்டு வரை, இலங்கையில் இரட்டைப் பிரசாவுரிமை பெறுவதற்காக விண்ணப்பித்துள்ள நபர்களின் எண்ணிக்கை ஒவ்வோர் ஆண்டுவாரியாக தனித்தனியாக யாது என்பதையும்;

(ii) அவர்களில், இரட்டைப் பிரசாவுரிமை வழங்கப்பட்டுள்ளவர்களின் எண்ணிக்கை ஒவ்வோர் ஆண்டுவாரியாக தனித்தனியாக யாது என்பதையும்;

(iii) இரட்டைப் பிரசாவுரிமை பெறுவதற்கு விண்ணப்பித்த திகதியிலிருந்து அதனை வழங்குதல் வரையான செயன்முறைக்கு நிர்ணயிக்கப்பட்ட ஒரு காலப்பகுதி உண்டா என்பதையும்;

அவர் இச்சபையில் தெரிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

41/2022

கௌரவ புத்திக பத்திறண,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் இயற்கையாக வளரும் மனித நுகர்வுக்கு உகந்த காளான்கள் தொடர்பில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளதா;

(ii) ஆமெனில், மேற்படி காளான் வகைகளின் எண்ணிக்கை யாது;

(iii) அவற்றின் பெயர்கள் யாவை;

(iv) இவற்றில் அகணிய காளான் வகைகள் யாவை;

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) இன்றளவில் சுயதொழிலாக காளான் பயிர்ச்செய்கையில் ஈடுபடும் பயிர்ச்செய்கையாளர்களுக்குத் தேவையான விதைகள் இறக்குமதி செய்யப்படுகின்றனவா;

(ii) ஆமெனில், குறிப்பிட்ட நாடுகள் யாவை;

(iii) இதற்காக ஒரு வருடத்துக்கு செலவிடப்படும் நிதித்தொகை யாது;

(iv) சுதேச காளான் விதைகளை பயிர்ச்செய்கையாளர்கள் மத்தியில் பிரபல்யப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா;

(v) ஆமெனில், குறிப்பிட்ட நடவடிக்கைகள் யாவை ;

என்பதையும் அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) காளான் பயிர்ச்செய்கையாளர்களுக்கு அரசாங்கம் சலுகைகளை வழங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதா;

(ii) ஆமெனில், அச்சலுகைகள் யாவை;

என்பதை அவர் மேலும் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

259/2022

கௌரவ ஹேஷா விதானகே,— சுற்றாடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2019 ஆம் ஆண்டில் இரத்தினபுரி மாவட்டத்தில் நிகழ்கின்ற சுற்றாடல் மாசுபாட்டுடன் சம்பந்தப்பட்டதாக மத்திய சுற்றாடல் அதிகாரசபைக்கு கிடைத்துள்ள முறைப்பாடுகளின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) முறைப்பாட்டு வகைப்படுத்தலுக்கமைய, அத்தகைய முறைப்பாடுகளில் எவ்வகை முறைப்பாடுகள் அதிகம் கிடைத்துள்ளன என்பதையும்;

(iii) மேற்படி (i)இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு, அம்முறைப்பாடுகளில் மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் முழுமையான அங்கீகாரம் அளிக்கப்பட்டுள்ள நிறுவனங்கள் தொடர்பில் கிடைத்துள்ள முறைப்பாடுகளின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(iv) அந் நிறுவனங்கள் மத்திய சுற்றாடல் அதிகாரபையின் சட்ட விதிகளுக்கு அமைவாக செயலாற்றி உள்ளனவா என்பதையும்;

அவர் இச்சபையில் தெரிவிப்பாரா?

(ஆ) (i) இரத்தினபுரி மாநகர சபையின் ஆளுகைப் பிரதேசத்தினுள் அமைக்கப்பட்டுள்ள தொழிற்சாலைகளால் ஏற்படுகின்ற சுற்றாடல் மாசுபாடு குறித்து ஆராயப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) தண்ணீரில் பார உலோகங்கள் கலப்பு, வளி மாசுபாடு மற்றும் ஒலி மாசுபாடு தொடர்பாக மத்திய சுற்றாடல் அதிகாரசபையினால் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட நிறுவனங்கள் யாவை என்பதையும்;

(iii) அத்தகைய பரிசோதனைகளின்படி எடுக்கப்பட்டுள்ள முடிவுகள் யாவை என்பதையும்;

(iv) தேசிய சூழல் சட்டத்திற்கு அமைய வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களை மீறிச் செயற்பட்டுள்ளதன் காரணமாக, தற்போது சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ள நிறுவனங்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

அவர் இச்சபையில் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

576/2022

கௌரவ சமிந்த விஜேசிறி,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கமத்தொழில் அபிவிருத்தியின் பொருட்டு விவசாய தரவுக்களஞ்சியம் ஒன்றினை நிறுவுவது மிகவும் முக்கியமானது என்பதனை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(ii) ஆமெனில், கமத்தொழில் அமைச்சினால் விவசாய தரவுக்களஞ்சியத்தினை நிறுவும் பணிகள் ஆரம்பிக்கப்பட்ட திகதி யாதென்பதையும்;

(iii) அதற்கென இது வரையில் செலவு செய்யப்பட்டுள்ள பணத்தொகை எவ்வளவென்பதையும்;

(iv) விவசாய தரவுக்களஞ்சியத்தை நிறுவுகையில் யாதேனும் மோசடி இடம்பெற்றிருப்பின், அது தொடர்பில் அமைச்சினால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபையில் தெரிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1032/2022

கௌரவ சாந்த பண்டார,— வனசீவராசிகள் மற்றும் வன வளப் பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) குருநாகல் மாவட்டத்தில் காட்டு யானை அச்சுறுத்தல் காணப்படுகின்ற பிரதேசங்கள் காணப்படுகின்றதென்பதை ஏற்றுக்கொள்கின்றாரா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி பிரதேசங்கள் உள்வாங்கப்பட்டுள்ள பிரதேச செயலகப் பிரிவுகள் அடையாளங் காணப்பட்டுள்ளனவா என்பதையும்;

(iii) மேற்படி பிரதேச செயலகப் பிரிவுகளின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iv) 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் காட்டு யானைகளின் தாக்குதல்கள் காரணமாக மேற் குறிப்பிட்ட பிரதேசங்களில் ஏற்பட்டுள்ள மனித உயிரிழப்புகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(v) மேற்படி ஆண்டுகளில் காட்டு யானைகளினால் மேற்குறிப்பிட்ட பிரதேசங்களில் ஏற்படுத்தப்பட்டுள்ள பயிர்ச் சேதங்களுக்கு இழப்பீடு செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1182/2022

கௌரவ ஜகத் குமார சுமித்ராரச்சி,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் சேவையாற்றுகின்ற விவசாய ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவியாளர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) மேற்படி எண்ணிக்கையினர் கிராம உத்தியோகத்தர் பிரிவுகளுக்கு எவ்வாறு இணைக்கப்பட்டுள்ளனர் என்பதையும்;

(iii) மேற்படி பதவியில் காணப்படுகின்ற வெற்றிடங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iv) அவற்றை நிரப்புவதற்கு மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(v) வட மாகாணத்துக்கு மேற்படி உத்தியோகத்தர்கள் நியமிக்கப்படவில்லை என்பதை அறிவாரா என்பதையும்;

(vi) வட மாகாணத்துக்கு மேற்படி உத்தியோகத்தர்களை நியமிப்பதற்கு மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி உத்தியோகத்தர்களுக்கு புதிய சேவை பிரமாணக் குறிப்பு இல்லை என்பதை அறிவாரா என்பதையும்;

(ii) ஆமெனில், அதனைத் தயாரிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(iii) ஆமெனில், அதனைத் தயாரிக்கும் திகதி மற்றும் விதம் யாவை என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) விவசாய ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவியாளர் சிலரின் ஓய்வூதியத்தை கணக்கிடுகையில் அவர்கள் விவசாய ஊக்குவிப்பாளர் மற்றும் சமுர்த்தி ஊக்குவிப்பாளர்களாக சேவையாற்றிய காலப்பகுதி கவனத்தில் கொள்ளப்படவில்லை என்பதை அறிவாரா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(iii) இவர்களுக்கு மேற்படி சேவை காலப்பகுதி எவ்வாறு எத்திகதியில் வழங்கப்படுமென்பதையும்;

அவர் மேலும் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1189/2022

கௌரவ நலீன் பண்டார ஜயமஹ,— முதலீட்டு மேம்பாட்டு அமைச்சரைக் கேட்பதற்கு,—(3)

(அ) (i) "தாமரை கோபுரம்" கருத்திட்டத்திற்காக செலவிடப்பட்ட மொத்தத் தொகை எவ்வளவென்பதையும்;

(ii) இக்கருத்திட்டத்திற்காக பெற்றுக்கொள்ளப்பட்ட கடன் தொகை எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி கருத்திட்டத்தின் ஊடாக ஈட்டுவதற்கு எதிர்பார்க்கப்படும் வருடாந்த வருமானம் எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1313/2022

கௌரவ மொஹமட் முஸம்மில்,— கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) களனி கங்கையை அண்டியதாக அமைந்துள்ள கைத்தொழிற்சாலைகளின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) அக்கைத்தொழிற்சாலைகளால் வெளியேற்றப்படும் கழிவுநீர், அந்த கங்கையுடன் கலப்பதை அறிவாரா என்பதையும்;

(iii) அந்தக் கழிவுநீர் காரணமாக களனி கங்கையின் நீருக்கு ஏற்படுகின்ற பாதிப்பு குறித்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) கழிவுநீரை களனி கங்கைக்கு வெளிவிடுவதைத் தடுக்க இன்றளவில் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3293/2022

கௌரவ இம்ரான் மஹ்ரூப்,— பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கடந்த அரசாங்கத்தினால் 2015 ஆம் ஆண்டு தொடக்கம் உள்ளூராட்சி மன்றங்களுக்கு அமய அடிப்படையில் அதிகளவான தொழிலாளர்கள் ஆட்சேர்த்துக்கொள்ளப்பட்டனர் என்பதை அறிவாரா என்பதையும்;

(ii) ஆமெனில், அத்தொழிலாளர்களில் இன்றளவில் சேவையாற்றிக் கொண்டிருக்கும் தொழிலாளர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) அத்தொழிலாளர்கள் இதுவரை சேவையில் நிரந்தரமாக்கப்படவில்லை என்பதை அறிவாரா என்பதையும்;

(iv) அவர்கள் சேவையில் நிரந்தரமாக்கப்படும் திகதி யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3337/2022

கௌரவ அலி சப்ரி ரஹீம்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) புத்தளம் நகரில் தொழில்நுட்பக் கல்லூரியொன்றைத் தாபிக்குமாறு என்னால் முன்வைக்கப்பட்ட கோரிக்கை தொடர்பில் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி தொழில்நுட்பக் கல்லூரியைத் தாபிப்பதற்கு எவ்வளவு காலம் எடுக்கப்படும் என்பதையும்;

(iii) அங்கு தமிழ் மொழியில் பாடநெறிகளை நடாத்தத் தேவையான வசதிகள் ஏற்படுத்தப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

---

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

பா.2/2022

கௌரவ புத்திக பத்திறண,— மன்னன் இராவணன் தொடர்பாக முறைசார்ந்த ஆய்வொன்றை மேற்கொள்ளல்,— மன்னன் இராவணன் தொடர்பாக உறுதியான வரலாற்றுச் சான்றுகள் இல்லாத போதிலும், முறைசார்ந்த ஆய்வொன்றின் மூலம் அவர் தொடர்பாக நாட்டு மக்களின் மனப்பாங்கினை மேம்படுத்துவதற்கும் மன்னன் இராவணனுக்கு இருந்த அறிவினை நாட்டின் அபிவிருத்திக்கு பயன்படுத்துவதற்கும், இலங்கை வரலாற்றில் மறைந்துபோயுள்ள அத்தியாயமொன்றை வெளிக்கொண்டு வருவதற்கும் இயலுமாயுள்ளதால் புத்திஜீவிகள் குழுவொன்றின் மூலம் மன்னன் இராவணன் தொடர்பான ஆய்வொன்று மேற்கொள்ளப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.3/2022

கௌரவ புத்திக பத்திறண,— உள்நாட்டு அரிசி வகைகளின் போசாக்குக் குணம் தொடர்பில் மக்களை விழிப்புணர்வூட்டல்,— தற்போது இலங்கையிலுள்ள சந்தைகளில் கிடைக்கின்ற பழைய உள்நாட்டு அரிசி மற்றும் தற்போது பயன்படுத்தப்படுகின்ற புதிய அரிசி வகைகளின் போசாக்குக் குணம் தொடர்பாகவும், பல்வேறு நோய்களால் பீடிக்கப் பட்டுள்ளவர்கள் நுகர வேண்டிய அரிசி வகைகள் தொடர்பில் மக்களை விழிப்புணர்வூட்டல் மற்றும் விவசாயிகள் அத்தகைய நெல் வகைகளை பயிரிடுவதற்கு வசதிகளை ஏற்படுத்துவது தொடர்பாகவும் அரசாங்கம் தேசிய மட்டத்திலான நிகழ்ச்சித்திட்டமொன்றைத் திட்டமிட்டு நடைமுறைப்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.4/2022

கௌரவ புத்திக பத்திறண,— ஆக்கிரமிப்புச் செடிகள் மற்றும் விலங்குகள் காரணமாக உயிரினப் பல்வகைமைக்கு ஏற்படுகின்ற பாதிப்பினைக் குறைத்தல்,— இலங்கையின் உயிரினப் பல்வகைமைக்கு பாதிப்பு ஏற்படக்கூடிய ஆக்கிரமிப்புச் செடிகள் மற்றும் விலங்குகளை இனங்கண்டு, அவற்றைப் பெயரிடுவதன் மூலம் அத்தகைய செடிகள் மற்றும் விலங்குகள் பெருகச் செய்யப்படுவதையும், இறக்குமதி செய்யப்படுவதையும் தடை செய்து இலங்கையின் சுற்றுச் சூழலைப் பாதுகாக்க அரசாங்கம் இடையீடு செய்து துரிதமாக தேவையான சட்டங்களை உருவாக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.5/2022

கௌரவ குணதிலக்க ராஜபக்ஷ,— உள்நாட்டு விவசாய உற்பத்திகளின் உயர் விளைதிறன் கருதி வன விலங்குகளினால் ஏற்படுத்தப்படுகின்ற பயிர்ச் சேதத்தினைத் தடுத்தலும் பயிர் நட்டஈடு வழங்குதலும்,— சிறிய அளவிலான மற்றும் வீட்டுத்தோட்டச் செய்கையாக விவசாயத்தில் ஈடுபட்டுள்ள விவசாயிகள் பயிரிடுகின்ற சாதிக்காய், கிராம்பு, மிளகு, தேங்காய், பல்வேறு பழ வகைகள் போன்ற நிரந்தரப் பயிர்கள் மற்றும் கிழங்கு, வெங்காயம், மரக்கறிகள், நெல் போன்ற போகப் பயிர்களுக்கு மந்திகள், காட்டுப் பன்றிகள், முள்ளம்பன்றிகள், யானைகள் போன்ற பல்வேறு வன விலங்குகளினால் ஏற்படுத்தப்படுகின்ற பாதிப்பைத் தடுப்பதற்காக சம்பந்தப்பட்ட சகல அமைச்சுகளும் இணைந்து தேசிய விவசாய உற்பத்திப் பாதுகாப்புக் கொள்கையொன்றை நடைமுறைப்படுத்தும் தேசிய வேலைத்திட்டமொன்றை தயாரிப்பதற்கும், வன விலங்குகளினால் ஏற்படுத்தப்படுகின்ற பயிர்ச் சேதத்திற்கான முழுமையான இழப்பீட்டினை வழங்கும் பயிர்க் காப்புறுதித் திட்டமொன்றை உருவாக்குவதற்காகவும் அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.6/2022

கௌரவ குணதிலக்க ராஜபக்ஷ,— அறநெறிப் பாடசாலைக் கல்வியை மேம்படுத்துவதற்குத் தேவையான பௌதீக வளங்களை வழங்குதல்,— அறநெறிப் பாடசாலைக் கல்வியின் மூலம் நற்பண்புகளுடன் கூடிய ஒழுக்கசீலமான சமூகமொன்றை கட்டியெழுப்புவதற்கான அடிப்படையினை உருவாக்க முடியுமென்ற போதிலும்,மேற்படி பாடசாலைகளில் நிலவும் பௌதீக வளப் பற்றாக்குறையினால் ஏற்படுகின்ற சிரமங்கள் காரணமாக அநேகமான பிள்ளைகள் அறநெறிப் பாடசாலைக் கல்வியில் கவனம் செலுத்தாத காரணத்தினால், நாட்டின் பெரும்பாலான அறநெறிப் பாடசாலைகளுக்கு அத்தியாவசிய மாணவர் மேசைகள், வாங்குகள், ஆசிரியர் மேசைகள், கரும்பலகைகள், வெண்பலகைகள், மற்றும் அதன் சிறு அறநெறி நூலகங்களுக்கான புத்தக அலுமாரிகளை வழங்குவதற்கும், அறநெறிப் பாடசாலைப் பிள்ளைகளுக்கு சிறுமியர் சீருடை (லமா சாரி), தேசிய உடை மாதிரியான உடையொன்றுக்குத் தேவையான துணிகளை வழங்குவதற்கும், தனியார் துறையினர் மற்றும் கொடையாளிகளினதும் பங்களிப்புடன் அரசாங்கம் வேலைத்திட்டமொன்றை நடைமுறைப்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.7/2022

கௌரவ குணதிலக ராஜபக்ஷ,— சிறிய மற்றும் மத்திய அளவிலான தொழில் முயற்சியாளர்களை ஊக்குவிப்பதற்கு தேசிய அபிவிருத்தி வங்கியொன்றையும் பொருளாதார தலைமைத்துவமொன்றையும் கட்டியெழுப்புதல்,— இலங்கையில் அதிக வட்டிக்கு இயங்குகின்ற நுண்நிதிக் கடன்கள், நிதி நிறுவனக் கடன்கள் மற்றும் குத்தகைக்கடன்கள் பொறியிலிருந்து சிறிய மற்றும் மத்திய அளவிலான தொழில்முயற்சியாளர்களை மீட்டெடுத்து உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சந்தையினை இலக்காகக் கொண்ட புத்தாக்க மற்றும் பெறுமதி சேர்க்கின்ற தொழில்முயற்சிகளில் ஈடுபட்டுள்ள சிறிய மற்றும் மத்திய அளவிலான தொழில்முயற்சியாளர்களுக்கு, கமத்தொழில் உற்பத்தியாளர்களுக்கு மற்றும் சேவை வழங்கும் தொழில்முயற்சியாளர்களுக்கு தளர்த்தப்பட்ட நிபந்தனைகள் மற்றும் தளர்த்தப்பட்ட வட்டித் தொகையொன்றுக்கு நீண்ட காலமாக செலுத்தும் வகையிலான நிதிக் கடன்களை வழங்கும் வங்கியொன்றை தாபிப்பதற்கும், நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு தொழில் வாய்ப்புகளை உருவாக்குவதற்கு மற்றும் தொழில்முயற்சி பொருளாதார தலைமைத்துவம் ஒன்றை கட்டியெழுப்புவதற்கும், இன்றளவில் தொழில்முயற்சித் துறையின் வளர்ச்சிக்கு உதவுகின்ற சகல நிறுவனங்களையும் ஒருங்கிணைத்து உள்நாட்டு தொழில்முயற்சி அபிவிருத்தி மற்றும் பொருளாதார மீளெழுச்சி செயலணியொன்றை உருவாகும் பொருட்டு அரசாங்கம் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.8/2022

கௌரவ குணதிலக ராஜபக்ஷ,— முன் பிள்ளைப் பருவ அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களைத் தரப்படுத்தல்,— ஒரு நாட்டின் எதிர்கால பிரசைகள் புத்திசாதுர்யமிக்கவர்களாவதற்கு முன் பிள்ளைப் பருவ அபிவிருத்தியானது அடிப்படையாக அமைவதனால் நாட்டிலுள்ள முன் பள்ளிகள், சிறுவர் பராமரிப்பு நிலையங்கள் மற்றும் முன் பிள்ளைப் பருவ நிலையங்களை உயர் தரத்தில் பேணிச் செல்ல வேண்டும் என்பதாலும் அந்த நிலையங்களைப் பதிவு செய்து அவை உரிய தர நியமங்களுக்கு அமைவாக பேணிச் செல்லப்படுவதனை ஒழுங்குபடுத்துவதற்கும், அவற்றைப் பேணிவரும் முயற்சியாளர்கள் மற்றும் பதவியணியினரிடம் தேசிய தொழில்திறன் சான்றிதழ்கள் (NVQ) இருப்பதனை கட்டாயமாக்குவதற்கும், அவ்வாறான நிலையங்களைில் இருக்க வேண்டிய இடவசதிகள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் தொடர்பான பரிந்துரைகளை சட்டமாக்குவதற்கும், அவற்றில் பணியாற்றுபவர்களுக்கு பங்களிப்பு ரீதியிலான சமூக பாதுகாப்பு முறையிலொன்றை உருவாக்குவதற்கும், நாட்டிலுள்ள சகல கிராம சேவகர் பிரிவுகளிலும் அவ்வாறான நிலையங்களை ஆரம்பிப்பதற்காக சலுகை வட்டிக்கு கடன் வசதிகளை வழங்குவதற்கும், தேவையான கொள்கைகள் மற்றும் சட்டங்களை உருவாக்கி தேசிய முன்பிள்ளைப் பருவ அபிவிருத்திக் கொள்கையொன்றை ஆக்குவதற்கும் பொருத்தமான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டுமென இப் பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.9/2022

கௌரவ குணதிலக ராஜபக்ஷ,— இருபத்தொறாம் நூற்றாண்டின் மூன்றாம் தசாப்தத்தின் சவால்களுக்கு முகங்கொடுக்கக் கூடிய கூட்டுறவு இயக்கமொன்றை உருவாக்குதல்,— இலங்கையில் தற்போதுள்ள கூட்டுறவு முறையானது இன்றைக்கு அரை நூற்றாண்டுக்கு முன்னர் நியமிக்கப்பட்ட கூட்டுறவு மறுசீரமைப்பு ஆணைக்குழுவின் பரிந்துரைகளுக்கு அமைவாக உருவாக்கப்பட்ட ஒரு முறை என்பதாலும், இந்த இயக்கமானது இருபத்தொராம் நூற்றாண்டின் மூன்றாம் தசாப்தத்தின் சவால்களுக்கு முகங்கொடுக்கக் கூடிய அதாவது சுயஉதவி, பரஸ்பர உதவி, மற்றும் சிக்கனம் ஆசிய கூட்டுறவு கோட்பாடுகளை அடிப்படையாகக் கொண்டு இந்நூற்றாண்டின் சவால்களை வெற்றி கொள்ளத்தக்க நவீன தொழில் நுட்ப பயன்பாட்டின் ஊடாக பாரிய வர்த்தக வலையமைப்புக்களுடன் சிறந்த முறையில் போட்டியிடக் கூடியவாறு விவசாயத் துறையின் மேம்பாட்டுக்கும் மூலதனப் பிரச்சனை மற்றும் சந்தைப் பிரச்சினைகளுக்கு வெற்றிகரமான மாற்று வழியாகவும் ஏற்றுமதித் துறையின் மேம்பாட்டுக்கும் ஈடுபடுத்தத்தக்க அதிக சொத்துக்களைக் கொண்ட துறை என்பதாலும் தற்போதைய கூட்டுறவு முறையில் மேற் குறிப்பிட்ட நோக்கங்களை மேம்பாடு செய்வதற்காக ஏற்புடைய புதிய கொள்கைகள் மற்றும் சட்டங்களை உருவாக்கி, கூட்டுறவு இயக்கத்தின் உண்மையான உரிமையாளர்களான கூட்டுறவு பங்குரிமையாளர்களின் அதிகாரத்தை அதிகரித்து கூட்டுறவு இயக்கத்தினை முழுமையாக மறுசீரமைப்பதற்கு அரசாங்கத்தினால் பொருத்தமான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.10/2022

கௌரவ குணதிலக ராஜபக்ஷ,— பெண்களின் உரிமைகளைப் பாதுகாத்தல் மற்றும் பெண்களின் முன்னேற்றத்தை உறுதிப்படுத்துதல்,— பெண்களின் உடல், உள, சமூகப் பாதுகாப்பு மற்றும் முன்னேற்றத்தை ஏற்படுத்துவது நாட்டின் முக்கிய அபிவிருத்தி தேவைப்பாடொன்றாக இருப்பதனால், பெண்கள் உரிய முறையில் நடத்தப்படாமைக்கு எதிராக வழக்கு விசாரணை மூலம் தண்டனை விதிப்பதற்குப் பெண்களுக்கு எதிரான துன்புறுத்தல் துஷ்பிரயோம், பருவமடையாத சிறுமியர் அல்லது பெண்களை வன்புணர்தல் தொடர்பில் பிணை வழங்கப்படாத சட்டங்களை ஆக்குவதற்கும், பொலிஸ் மகளிர் மற்றும் சிறுவர் பிரிவின் தத்துவங்களை விஸ்தரிப்பதற்கும், பராமரிப்பு மற்றும் விவாகரத்து வழக்குகளை தாமதிக்காது தீர்த்து வைப்பதற்கு பொருத்தமான நீதிமன்ற செயன்முறையை ஏற்படுத்துவதற்கும், பஸ் வண்டிகளில் பெண்களுக்கு ஒரு பக்கமாக ஆசன வரிசையை ஒதுக்குவதற்கும், நுண் நிதிக் கம்பனிகளின் சுரண்டலுக்கு ஆளாவோரின் கடனை பதிவழிப்பு செய்வதற்கான சட்டங்களை ஆக்குவதற்கும், ஒவ்வொரு வீட்டுக்கும் நீர் மற்றும் சமையல் நடவடிக்கைகளுக்கு குறைந்த செலவைக் கொண்ட எரி சக்தியை உறுதி செய்வதற்கும், சமயலறை உபகரணங்களை சலுகை வட்டி அடிப்படையில் கொள்வனவு செய்வதற்காக வங்கி வசதிகளைப் பெற்றுக் கொடுப்பதற்கும், விதவைப் பெண்களுக்கு கணவர் பெற்றுக் கொண்ட சம்பளம் வழங்கப்படுவதை சட்டமாக்குவதற்கும், தொழில் வாய்ப்பற்ற விதவைகளுக்கு தங்கியிருத்தல் கொடுப்பனவொன்றை அரசாங்கத்திடமிருந்து பெற்றுக் கொடுப்பதற்கும், சமமான சேவைக்கு சமமான சம்பளத்தைப் பெற்றுக் கொடுப்பதை சட்டமாக்குவதற்கும், பெண்களின் உற்பத்திகளை சந்தைப்படுத்தலுக்கு தகுந்த சந்தைப்படுத்தல் வலையமைப்பை ஏற்படுத்தவும் தேவையான கொள்கைகள் மற்றும் சட்டங்களை ஆக்குவதற்கும், அரசாங்கம் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.11/2022

கௌரவ குணதிலக ராஜபக்ஷ,— இரத்தினக்கல் ஆபரண துறையின் அபிவிருத்தியை மேம்படுத்தல்,— இரத்தினக்கல் படிமங்கள் உள்ள காணிகளை இனங்காண்பது முதல் இரத்தினக்கல் சந்தைப்படுத்தல் வரையிலான நடவடிக்கைகளில் பல்வேறுபட்ட தரப்பினர்கள் சம்பந்தப்படுவதும் பல்வேறு கட்டமைப்புகள் செயற்படுவதும் இடம்பெறுகின்ற போதிலும், அவற்றுக்கு இடையிலான இடைத்தொடர்புகள் காணப்படாமை இரத்தினக்கல் ஆபரணக் கைத்தொழிலின் முன்னேற்றத்திற்கும் அபிவிருத்திக்கும் பாரிய தடையாக அமைவதால் இக்கைத்தொழில் தொடர்பான தேசிய முன்னுரிமைகளை உள்ளடக்கிய தேசிய கொள்கையை வகுத்து கைத்தொழிலின் உற்பத்தித் திறனை மேம்படுத்துவது சம்பந்தமான இடைத்தொடர்பை கட்டியெழுப்புவதற்கும் பெறுமதி சேர்க்கப்பட்ட இரத்தினக்கல் அல்லது இரத்தினக்கல் பயன்படுத்தப்பட்ட தயாரிப்புகளை ஊக்குவிப்பதற்கும் வரிச் சலுகை உள்ளிட்ட சலுகைகளை பெற்றுக் கொடுப்பதற்கும் இரத்தினக் கல் கைத்தொழிலில் ஈடுபட்டுள்ள சுரங்கப் பணியாளர்களின் உயிருக்குள்ள அச்சுறுத்தல் மற்றும சுரங்கங்கள் மூலம் சுற்றாடலுக்கு ஏற்படுகின்ற பாதிப்புகளை ஈடுசெய்வதற்கான காப்புறுதித் திட்டமொன்றை ஏற்படுத்துவதற்கும் அகழ்வு உரிமைப் பத்திரம் பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதனை முன் நிபந்தனையாக சட்டமாக்குவதற்கும், இரத்தினக்கல் உரிமையாளர்களுக்குக் கிடைக்கும் நிதியை மீள் முதலீடு செய்வதற்கான வாய்ப்புக்களை விஸ்தரிப்பதற்கும், இரத்தினக்கல் கொள்வனவுக்காக வருகைதரும் வெளிநாட்டவர்களுக்கு விதிக்கப்படுகின்ற கட்டுப்பாடுகளை நீக்குவதற்கும், இரத்தினக்கல் கட்டுப்பாடுகளை நீக்குவதற்கும் இரத்தினக்கல் பயன்படுத்தி கைப்பணி உற்பத்திகள் உள்ளடங்கலாக மனைசார் கைத்தொழில் வரை உற்பத்திகளை பல்வகைப்படுத்துவதற்கும் சந்தைப்படுத்தல் வரை சகல துறைகளிலும் புதிய தொழில் நுட்பத்தை பயன்படுத்தவும் பொருத்தமான கொள்கைகள் மற்றும் சட்டங்களை ஆக்குவதற்கும் அரசாங்கம் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.12/2022

கௌரவ குணதிலக்க ராஜபக்ஷ,— சிறு ஏற்றுமதிப் பயிர்கள் பொருளாதார நிலையம் உட்பட ஏற்றுமதி விவசாயப்பயிர்கள் தொடர்பான புத்தாக்க கைத்தொழில் வலயமொன்றினை உருவாக்குதல்,— ஆரம்ப காலத்தில் இலங்கையில் உற்பத்தி செய்யப்பட்ட சிறு ஏற்றுமதிப் பயிர்களின் மரபுரிமையாக காணப்பட்ட “சிலோன் ஸ்பைசஸ்” என்ற நற்பெயரை மீளக் கட்டியெழுப்பி உலக சந்தையை வெற்றிகொள்வதற்காக சிறு ஏற்றுமதிப் பயிர்களை பாரிய அளவில் உற்பத்தி செய்யும் மாவட்டங்களை அடிப்படையாகக் கொண்ட பொருளாதார நிலையங்களை உள்ளடக்கியதாக அப்பயிர்கள் தொடர்பில் பெறுமதிசேர் புத்தாக்கக் கைத்தொழில் வலயங்களை உருவாக்குமாறும் இந்த ஏற்றுமதி உற்பத்திகளுக்கு தற்போது விதிக்கப்பட்டுள்ள வரிக் கொள்கையை மீளாய்வு செய்து ஏற்றுமதி விவசாயப் பயிர் கைத்தொழிற்துறையின் முன்னேற்றத்திற்கு பொருந்தும் வகையிலான வரிக் கொள்கை ஒன்றினை உருவாக்குமாறும் சிறு ஏற்றுமதிப் பயிர் உற்பத்தியாளர்களை ஊக்குவிப்பதற்கு உதவியாக அறுவடை விற்பனையின் பின்னர் கொடுப்பனவினை மேற்கொள்ளக் கூடிய முறையிலான கடன் வசதிகளை பெற்றுக் கொடுத்தல் மற்றும் அதனோடு விவசாயக் காப்புறுதி ஒன்றினையும் விவசாயிகளுக்கு பெற்றுக் கொடுக்கும் முறைமையொன்றினை ஏற்படுத்துவதற்கும் அரசாங்கத்தினால் அவசியமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.13/2022

கௌரவ குணதிலக்க ராஜபக்ஷ,— கண்டிய நடனம், பாரம்பரிய கலைகள், மர வேலைப்பாடுகள், சிற்பங்கள் மற்றும் கட்டிட நிர்மாணங்களை உலக மரபுரிமைகளாக பிரகடனப்படுத்தல் மற்றும் அவற்றை பாதுகாத்தல்,—இலங்கையின் வரலாற்றுப் பெருமையையும் அடையாளத்தினையும் வெளிப்படுத்தும் பாரம்பரிய கண்டிய நடனங்கள் மற்றும் கலைகள், ஓவியங்கள், மரவேலைப்பாடுகள், சிற்பங்கள் மற்றும் கட்டிட நிர்மாணங்கள் எமது நாட்டுக்கேயுரியதும் மிக அரிதான கலாசார மற்றும் கலைகள் என்ற காரணத்தினாலும் அவற்றை உலக மரபுரிமைகளாக பிரகடனப்படுத்துவதற்கு அவசியமான நடவடிக்கைகளை மேற்கொள்ளமாறும் மேற்படி மரபுரிமைகளைப் பாதுகாத்து பேணிச் செல்லும் கலைஞர்களது சமூக, பொருளாதார அபிவிருத்தியை மேற்கொள்வதற்கும், கண்டிய மரபுரிமைகளை பாதுகாத்து, மேம்படுத்தி, முறையாக நிர்வாகம் செய்வதற்கு சட்ட ரீதியான மன்றம் ஒன்றையோ அல்லது சபையொன்றினையோ ஸ்தாபிப்பதற்கு அரசாங்கத்தினால் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.14/2022

கௌரவ குணதிலக்க ராஜபக்ஷ,— இலங்கையின் வெளிநாட்டுச் சேவை அலுவல்களை மேம்படுத்துதல்,— இலங்கையின் மொத்தத் தேசிய வருமானத்தில் 8% அளவு பங்களிப்பு வெளிநாட்டிலுள்ள ஊழியப்படையின் மூலம் கிடைக்கப் பெறுவதனால் குறித்த துறையினை மேம்படுத்துவதற்காகவும், வெளிநாட்டு ஊழியக் கேள்விக்கு இணையாக ஊழியர்களைப் பயிற்றுவிக்கும் நிறுவனமொன்றைத் ஸ்தாபிப்பதற்கும், வெளிநாட்டிலுள்ள பிரஜைகளுக்கு வாக்களிக்கும் சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுப்பதற்கும், அவர்களுக்கான பங்களிப்பு ரீதியிலான ஓய்வூதியச் சம்பளம் போன்ற சமூகப் பாதுகாப்பு முறைமையொன்றினை ஏற்படுத்துவதற்கும், வெளிநாட்டுச் சேவை காரணமாக ஏற்படக் கூடிய தவிர்க்க முடியாத துர்ப்பாக்கிய நிலைமைகளின் போதும், ஏற்படக் கூடிய விபத்துக்களின் போதும் நட்டஈடு வழங்கக் கூடியவாறான காப்புறுதி முறைமையொன்றினை ஏற்படுத்துவதற்கும், அவர்களது சேமிப்புகளுக்கு அதிகளவான வட்டியினை வங்கிளினூடாகப் பெற்றுக் கொடுப்பதற்கும், அவர்களது வீடுகளை நிர்மாணிப்பதற்காக சலுகை அடிப்படையிலான வட்டி மற்றும் கடன்களை வழங்குவதற்கும், அரசாங்க தொழில் வாய்ப்புக்களை வழங்குகையில் வெளிநாட்டிலுள்ள பெற்றோர்களின் பிள்ளைகளுக்கு முன்னரிமை அளிப்பதற்கும் இலங்கைத் தூதுவராலயங்கள் மற்றும் உள்நாட்டு, வெள்நாட்டு தொழில் முகவர் நிறுவனங்கள் மூலமாக இடம்பெறுகின்ற முறைகேடுகளைத் துரிதமாக தீர்ப்பதற்கு பொருத்தமான முறைமையொன்றினை உருவாக்குவதற்கும் ஊழியர்களைப் பதிவு செய்கையில் அறவீடு செய்யப்படுகின்ற கட்டணங்களில் இருந்தும் மற்றும் வீட்டுப் பணிக்காக வெளியேறுகையில் முகவர் நிலையம் வழங்கும் பணத்தொகையில் குறிப்பிட்ட ஒரு தொகையினைப் பெற்றுக் கொண்டு அதன் மூலம் குடியகல்வுக்கு முன்னரும் அதன் பின்னருமான நம்பிக்கைப் பொறுப்பொன்றினை ஏற்படுத்துவதற்கும் அரசாங்கத்தினால் பொருத்தமான வேலைத்திட்டம் ஒன்று ஆரம்பிக்கப்படல் வேண்டும் எனவும் இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.16/2022

கௌரவ ரோஹண பண்டார,— இலங்கை கல்வி நிர்வாக சேவையைச் சேர்ந்த அலுவலர்களுக்கு முறையான இடமாற்றங்களை வழங்குதல்,— இலங்கை கல்வி நிர்வாக சேவையைச் சேர்ந்த அலுவலர்களுக்கென முறையான இடமாற்றக் கொள்கை நடைமுறையில் இல்லாதமை காரணமாக அவர்கள் மிகவும் அநாதரவான நிலைக்கு ஆளாகியிருப்பதனால், இச் சேவையில் ஈடுபட்டுள்ள அலுவலர்களுக்காக முறையான இடமாற்றக் கொள்கையொன்றை அரசாங்கம் நடைமுறைப்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.17/2022

கௌரவ ரோஹண பண்டார,— கமக்காரர் ஓய்வூதியத் திட்டத்தை காலத்தின் தேவைக்கு ஏற்ப மாற்றி அமைத்தல்.— அபிவிருத்தியடைந்த நாடுகளில்கூட கமக்காரர்களுக்கென பல்வேறு நலன்புரி வேலைத்திட்டங்கள் நடைமுறையில் உள்ளதாலும், இலங்கையில் கமக்காரர்களுக்கென நடைமுறையிலுள்ள கமக்காரர் ஓய்வூதியத் திட்டம் காலத்தின் தேவைக்கு ஏற்ப மாற்றப்படாமையால் அதன்பால் கமக்காரர்களை ஈர்ப்பதில் சிரமங்கள் ஏற்பட்டுள்ளதாலும், கமக்காரர்களுக்கு அதிகளவான நன்மைகள் கிடைக்கும் விதமாக இந்தக் கமக்காரர் ஓய்வூதியத் திட்டம் அரசாங்கத்தினால் மீண்டும் மீளாய்வு செய்யப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.18/2022

கௌரவ ரோஹண பண்டார,— கல்விக்காகவே ஒதுக்கப்பட்ட தொலைக்காட்சி அலைவரிசையொன்றை ஆரம்பித்தல்,— தற்போது நிலவும் கொவிட்-19 தொற்றுநோய் காரணமாக இன்றளவில் பாடசாலைகள் மூடப்பட்டுள்ளமையால் பிள்ளைகளின் கல்விச் செயற்பாடுகளுக்கு பயன்தரக்கூடிய கல்விக்காகவே ஒதுக்கப்பட்ட தொலைக்காட்சி அலைவரிசையொன்று அரசாங்கத்தினால் விரைவாக ஆரம்பிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.19/2022

கௌரவ ரோஹண பண்டார,— உள்ளூராட்சி நிறுவனங்களில் தொழில் வாய்ப்புக்களை வழங்கும்போது நியாயமான கொள்கையொன்றைப் பின்பற்றுதல்,— பொது மக்களுக்கு பிறப்பு முதல் இறப்பு வரை முக்கியமான செயற்பொறுப்பினை நிறைவேற்றுகின்ற உள்ளூராட்சி நிறுவனங்களில் சிற்றூழியர், தொழிலாளர் முதலிய நியமனங்களை வழங்கும் போது பெரும்பாலும் குறித்த உள்ளூராட்சி நிறுவனத்தின் பிரதானியின் பிரிவுக்கு முக்கியத்துவமளிக்கப்படுகின்ற சந்தர்ப்பங்கள் தற்போது காணப்படுவதனால் இந்த நிலைமையை மாற்றியமைத்து குறித்த உள்ளூராட்சி நிறுவனத்தின் அனைத்துப் பிரிவுகளும் உள்ளடங்கும் வகையில் மேற்படி தொழில் வாய்ப்புக்களை பகிர்ந்தளிப்பதற்குப் பொருத்தமான வேலைத்திட்டம் ஒன்று அரசாங்கத்தினால் தயாரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.20/2022

கௌரவ (திருமதி) ரோஹினீ குமாரி விஜேரத்ன,— சிறுவர்களுக்கு எதிராக இடம்பெறும் உடல்ரீதியான தண்டனைகளை இலங்கையிலிருந்து இல்லாதொழித்தல்,— சிறுவர்களுக்கு எதிராக இடம்பெறும் உடல்ரீதியான தண்டனைகளையும் உளரீதியான துன்புறுத்தல்களையும் கண்டித்து 2021.02.12 ஆம் திகதி உயர் நீதிமன்ற வழக்கு இலக்கம் SC/FR/97/2017 மூலம் தண்டனைச் சட்டக்கோவையின் 341(i) ஆம் பிரிவை இரத்துச் செய்வதற்கும் UNCRC இன் இலக்கம் 19, 28(2) மற்றும் 37 ஆம் பிரிவுகளை நடைமுறைப்படுத்துவதற்கும் கல்வி அமைச்சின் 12/2016 ஆம் இலக்கச் சுற்றறிக்கையினை நடைமுறைப்படுத்துவதற்கும் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளதனாலும், 2020.03.01 ஆம் திகதி 08 வயது சிறுமியொருவர் பிரம்பால் அடித்து வீட்டில் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பில் தேசிய மற்றும் சர்வதேச ஊடகங்களின் கவனம் செலுத்தப்பட்ட போதிலும் மேற்படி உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பின் அடிப்படையிலேனும் அது தொடர்பில் குறிப்பிடத்தக்க நடவடிக்கை மேற்கொள்ளப் படாமையினாலும், சிறுவர்களுக்கு ஏற்படக்கூடிய நீண்டகால பாதகமான விளைவுகளை வெளிப்படுத்தி 2018.02.02 ஆம் திகதி ஐக்கிய நாடுகளின் சிறுவர் உரிமைகள் பற்றிய குழுவின் (UNCRC) இலங்கை மீதான கண்காணிப்பு அறிக்கை மூலம் சிறுவர் பாதுகாப்பின் நெருக்கடியான நிலைமை, குறிப்பாக உடல்ரீதியான தண்டனைகளை முடிவுக்குக் கொண்டுவருவது வலியுறுத்தப்பட்டுள்ளதனாலும், 2020.10.06 ஆம் திகதிய பாராளுமன்ற ஹன்சாட் அறிக்கை இலக்கம் 304/2020 இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு பாரியளவில் அதிகரித்து வரும் சிறுவர் துஷ்பிரயோகங்கள் தொடர்பிலான தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் சேவை சம்பந்தமாக திருப்தியடைய முடியாதென கல்வி அமைச்சரினால் தெரிவிக்கப்பட்டுள்ளதனாலும், துரிதமாக சட்டங்களைத் திருத்துவதன் மூலமும் தற்போதுள்ள சட்டங்களை முறையாக நடைமுறைப்படுத்துவதன் மூலமும் சிறுவர் பாதுகாப்பு தொடர்பான தேசிய நெருக்கடியை முடிவுக்குக் கொண்டு வருவதற்குத் தேவையான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா 22/2022

கௌரவ கிங்ஸ் நெல்சன்,— சிறிய மற்றும் நடுத்தர அளவிலான அரிசி ஆலை உரிமையாளர்களை வலுவூட்டுதல்,— இலங்கையில் அரிசி விலையைக் கட்டுப்படுத்துவதற்கான ஆற்றலைக்கொண்ட சிறிய மற்றும் நடுத்தர அளவிலான அரிசி ஆலை உரிமையாளர்கள் இன்றளவில் பல சிரமங்களுக்கு முகங்கொடுத்துள்ளதனால், அச்சிக்கல்களைத் தீர்ப்பதற்காக அரசாங்கம் துரிதமான வேலைத்திட்டமொன்றை உருவாக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 23/2022

கௌரவ சமிந்த விஜேசிறி,— சகல அரச நிறுவனங்களையும் அரசுக்குச் சொந்தமான கட்டிடங்களில் நிலையப்படுத்தல்,— பொது மக்களின் வரிப் பணத்தில் பேணப்படுகின்ற அரச நிறுவனங்களை தனியார் கட்டிடங்களில் நிலையப்படுத்துவதன் மூலம் பெருந்தொகை பணம் வீணாக செலவாவதாலும், மேற்படி நிறுவனங்களை அரச கட்டிடங்களில் நிலையப்படுத்துவதன் மூலம் பெருமளவு பணத்தை சேமிக்க முடியுமென்பதாலும், சகல அரச நிறுவனங்களையும் அரசுக்குச் சொந்தமான கட்டிடங்களில் மாத்திரம் நிலையப்படுத்துவதற்கு அரசாங்கத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 24/2022

கௌரவ சமிந்த விஜேசிறி,— வீழ்ச்சியடைந்துள்ள நிதி நிறுவனங்களை மீளக் கட்டியெழுப்புதல்,— ஒரு நாட்டின் பொருளாதார அபிவிருத்தி மற்றும் நிதிச் சந்தை மீது நிதி நிறுவனங்கள் முக்கிய தாக்கத்தை ஏற்படுத்துகின்ற போதிலும், கடந்த காலம் பூராகவும் இந்நாட்டின் சில நிதி நிறுவனங்கள் வீழ்ச்சியடைந்துள்ளமையினாலும், அதன் வைப்பாளர்கள் பொதுவாகப் பல பிரச்சினைகளுக்கு முகங் கொடுத்துள்ளமையினாலும் குறிப்பிட்ட நிதி நிறுவனங்களை மீள்கட்டியெழுப்புவதற்கு அரசாங்கம் துரித வேலைத்திட்டமொன்றை தயார் செய்தல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 25/2022

கௌரவ சமிந்த விஜேசிறி,— உள்நாட்டு டின் மீன் உற்பத்தியை அதிகரித்தல்,— இலங்கையைச் சூழ கடல் காணப்படுகையில், நாட்டுக்குத் தேவையான டின் மீன்களை இறக்குமதி செய்வதற்காக வருடாந்தம் பெருந்தொகை நிதி வெளிநாடுகளுக்குச் செலவிட வேண்டி ஏற்படுவதனால் இந்நிலைமையைத் தவிர்ப்பதற்காக உள்நாட்டு டின் மீன் கைத்தொழிலை மேம்படுத்துவதற்காக துரித வேலைத்திட்டமொன்றை முன்னெடுப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 26/2022

கௌரவ சமிந்த விஜேசிறி,— உள்ளூராட்சி நிறுவனங்களினால் கழிவகற்றப்படுதல்,— இலங்கையில் பெரும்பாலான உள்ளூராட்சி நிறுவனங்கள் கழிவுகளை அகற்றும் பொறுப்பினை இன்றளவில் தனியார் கம்பனிகளுக்குக் கையளித்துள்ளமையின் காரணமாக, வரி செலுத்தும் மக்களது பெருந்தொகை நிதி குறிப்பிட்ட கம்பனிகளைச் சென்றடைவதனால், குறித்த பணிகளை குறிப்பிட்ட உள்ளூராட்சி நிறுவன ஊழியர்களை ஈடுபடுத்தி மேற்கொள்வதற்குத் தேவையான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 272022

கௌரவ சமிந்த விஜேசிறி,— உள்ளூராட்சி நிறுவனங்களில் பழுதடைந்துள்ள வாகனங்களைத் திருத்துதல்,— பெரும்பாலான உள்ளூராட்சி நிறுவனங்களின் பழுதடைந்த நிலையில் காணப்படும் வாகனங்கள் குவித்து வைக்கப்பட்டுள்ள நிலையானது மிக சாதாரண ஒரு காட்சியாக அமைந்துள்ளதாலும், குறிப்பிட்ட நிறுவனங்களுக்கு புதிதாக வாகனங்களைக் கொள்வனவு செய்வதற்குப் பதிலாக, இந்த வாகனங்களை திருத்துவதன் மூலம் பெருந்தொகை நிதியை மீதப்படுத்த முடியுமென்பதாலும், உள்ளூராட்சி நிறுவனங்களின் பழுதடைந்துள்ள வாகனங்களைத் திருத்துவதற்கான துரித வேலைத்திட்டமொன்றை அரசாங்கம் தயார் செய்ய வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 28/2022

கௌரவ சமிந்த விஜேசிறி,— வெளிநாட்டில் பணிபுரியும் ஊழியர்களுக்கு நலனோம்புகை வசதிகளை வழங்குதல்,— இலங்கைக்கு ஆகக்கூடிய அந்நியச் செலாவணியை ஈட்டித்தருவதில் பங்களிப்புச் செய்கின்ற வெளிநாட்டில் பணிபுரியும் ஊழியர்களின் குடும்பங்களின் நலனோம்புகைக்காக துரித நிகழ்ச்சித்திட்டமொன்றை ஆரம்பிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 29/2022

கௌரவ சமிந்த விஜேசிறி,— புகையிரதப் பெட்டிகளை உள்நாட்டில் உற்பத்தி செய்தல்,— புகையிரதத் திணைக்களம் பெருமளவு பௌதீக வளங்களையும் மனித வளங்களையும் கொண்டதொரு திணைக்களமாக இருப்பதாலும், இந்நாட்டிற்கு புகையிரதப் பெட்டிகள் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும்போது பெருந்தொகையான பணம் வெளிநாடுகளைச் சென்றடைவதாலும், இந்நிலையைத் தடுப்பதற்கு புகையிரதப் பெட்டிகளை இந்நாட்டில் உற்பத்தி செய்வதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.30/2022

கௌரவ சமிந்த விஜேசிறி,— கண்டங்கத்திரியை உள்நாட்டில் செய்கை செய்தல்,— கடந்த சில ஆண்டுகளாக கண்டங்கத்திரியை இறக்குமதி செய்ததன் காரணமாக பெருந்தொகையான பணம் இலங்கையிலிருந்து வெளிநாடுகளுக்கு சென்றடைந்ததால் அந்நிலையை தடுத்து நிறுத்துவதற்கு உள்நாட்டில் கண்டங்கத்திரி செய்கையை மேம்படுத்துவதற்கான நிகழ்ச்சித்திட்டமொன்றை அரசாங்கம் நடைமுறைப்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.31/2022

கௌரவ சமிந்த விஜேசிறி,— இஞ்சி செய்கையினை முன்னேற்றுதல்,— கடந்த சில வருடங்களாக இலங்கைக்கு இஞ்சி இறக்குமதி செய்யப்பட்டதன் காரணமாக பெருந்தொகையான பணம் வெளிநாடுகளுக்கு சென்றடைந்ததால் இந்நாட்டிலிருந்து வெளிநாடுகளுக்கு பெருமளவு பணம் சென்றடைவதைத் தடுப்பதற்காகவும், இஞ்சி செய்கையினை உள்நாட்டில் முன்னேற்றுவதற்காகவும் துரித நிகழ்ச்சித்திட்டமொன்றை அரசாங்கம் நடைமுறைப்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா 32/2022

கௌரவ சமிந்த விஜேசிறி,— தேன் கைத்தொழிலை மேம்படுத்தல்,— மிகத் தரமான மருத்துவ குணமிக்க, உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுச் சந்தையில் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ள தேன் கைத்தொழிலை உள்நாட்டில் மேம்படுத்துவதற்கு துரித வேலைத்திட்டம் ஒன்றை அரசாங்கம் உருவாக்க வேண்டுமென இப் பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 33/2022

கௌரவ துஷார இந்துனில் அமரசேன,— வெற்றிலைப் பயிர்ச் செய்கையாளர்களின் பிரச்சினைகளைத் தீர்த்தல்,— வடமேல் மாகாணத்தில் கணிசமானளவு குடும்பங்கள் வெற்றிலைச் செய்கையில் ஈடுபட்டுள்ளதுடன் தற்போது குறித்த வெற்றிலைப் பயிர்ச் செய்கையாளர்கள் பல பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க நேர்ந்துள்ளமையால், இந்நிலைமையை தணிப்பதற்காக துரித வேலைத்திட்டமொன்று அரசாங்கத்தினால் தயார் செய்யப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 34/2022

கௌரவ துஷார இந்துனில் அமரசேன,— வடமேல் மாகாணத்தில் தரிசு நிலங்களாக மாறியுள்ள வயல்களில் பயிர்ச்செய்கையை மேற்கொள்ளுதல்,— ஒரு நாட்டின் அபிவிருத்தியில் உணவுப் பாதுகாப்பு மிகவும் முக்கியத்துவம் பெறுவதனால் வடமேல் மாகாணத்தில் தற்போது தரிசு நிலங்களாக காணப்படுகின்ற வயல்களில் மீண்டும் பயிர்ச்செய்கையை மேற்கொள்வதற்கான துரிதமானதும் பொருத்தமானதுமான வேலைத்திட்டமொன்று அரசாங்கத்தினால் தயார்செய்யப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 35/2022

கௌரவ துஷார இந்துனில் அமரசேன,— குருநாகல் மாவட்டத்தில் யானை-மனித மோதலைத் தீர்த்தல்,— வடமேல் மாகாணத்தில் குருநாகல் மாவட்டத்திலுள்ள ஏராளமான கிராமங்களில் யானை - மனித மோதல் மிக உக்கிரமாக காணப்படுவதனால் அதற்கான நிரந்தரத் தீர்வாகப் பொருத்தமான வேலைத்திட்டமொன்று அரசாங்கத்தினால் தயார்செய்யப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 36/2022

கௌரவ துஷார இந்துனில் அமரசேன,— குருணாகல் மாவட்டத்தில் சிறு குளங்களை மறுசீரமைத்தல்,— வடமேல் மாகாணத்திலுள்ள அதிகமானோர் கமத்தொழில் சார்ந்த தொழில்களில் ஈடுபடுவதானலும், அம்மக்களுடைய வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்துவதற்காக நீர் அத்தியாவசியமான காரணியொன்றாக அமைந்துள்ளதாலும் வடமேல் மாகாணத்தில் காணப்படுகின்ற சிறு குளங்கள் அனைத்தையும் மறுசீரமைப்பதற்காக அரசாங்கத்தினால் உரிய நடவடிக்கைகள் துரிதமாக மேற்கொள்ளப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.37/2022

கௌரவ துஷார இந்துனில் அமரசேன,— வட மேல் மாகாணத்தில் தொல்லியல் முக்கியத்துவமிக்க இடங்களை பேணிப் பாதுகாத்தல்,— ஒரு நாட்டின் எதிர்கால சந்ததியினருக்கு அந் நாட்டின் வரலாறு மிக முக்கியமென்பதாலும், இன்றளவில் இலங்கையின் வரலாற்றுச் சிறப்புமிக்க பாரம்பரியங்களுக்கு ஏற்படுகின்ற சேதங்கள் தொடர்பான பல்வேறு சம்பவங்கள் பதிவாகியுள்ளதாலும், எதிர்கால சந்ததியினருக்காக வட மேல் மாகாணத்தின் தொல்லியல் சார்ந்த இடங்களை பேணிப் பாதுகாப்பதற்கு அரசாங்கத்தினால் துரித வேலைத்திட்டமொன்று முன்னெடுக்கப்பட வேண்டுமென இப் பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.38/2022

கௌரவ துஷார இந்துனில் அமரசேன,— வடமேல் மாகாணத்தில் நீரேந்து பிரதேசங்களையும் நீர் ஊற்றுக்களையும் பாதுகாத்தல்,— வடமேல் மாகாணத்தில் கணிசமான அளவினர் கமத்தொழிலில் ஈடுபடுவதனால் அவர்களது எதிர்காலத்தை பாதுகாக்கும் பொருட்டு இப்பிரதேசத்தின் விலைமதிப்பற்ற வளமான நீரேந்து பிரதேசங்களையும் நீர் ஊற்றுக்களையும் பாதுகாப்பதற்கு அரசாங்கம் துரித வேலைத்திட்டமொன்றை முன்னெடுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.39/2022

கௌரவ துஷார இந்துனில் அமரசேன,— எல்லே விளையாட்டை மேம்படுத்துதல்,— எல்லே விளையாட்டானது இலங்கையில் கிராமிய மக்களின் விளையாட்டாகத் திகழ்வதனால், அதனை மேலும் மேம்படுத்துவதற்கான துரித வேலைத்திட்டமொன்றை அரசாங்கம் உருவாக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 40/2022

கௌரவ துஷார இந்துனில் அமரசேன,— நகரங்களிலிருந்து வெளிப் பிரதேசங்களுக்கு சிறைச்சாலைகளை இடமாற்றுதல்,— தற்சமயம் இலங்கையிலுள்ள பெரும்பாலான சிறைச்சாலைகள் நகரங்களை அண்டியதாக அமைந்துள்ளதாலும், சிறைச்சாலைகளுக்குள் பாரிய இடநெருக்கடி நிலவுவதாலும், இச்சிறைச்சாலைகளை நகரங்களிலிருந்து வெளிப் பிரதேசங்களுக்கு இடமாற்றி, தற்போது சிறைச்சாலைகள் அமைந்துள்ள வளாகங்களிலிருந்து உச்சப் பயனை பெற்றுக்கொள்வதற்குத் தேவையான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.41/2022

கௌரவ ஹெக்டர் அப்புஹாமி,— வெளிநாட்டு வேலை வாய்ப்புக்களில் ஈடுபட்டுள்ள இலங்கைத் தொழிலாளர்களின் சிரமங்கள் தொடர்பில் ஆராய்வதற்காக ஒம்புட்சுமன் ஒருவரை நியமனம் செய்தல்,— வெளிநாட்டிலுள்ள இலங்கைத் தொழிலாளர்கள் வெளிநாடுகளில் பல்வேறு சிரமங்களுக்கு ஆளாவதன் காரணமாகவும், மேற்படி தொழிலாளர்களுக்கு அந்நாடுகளிலுள்ள இலங்கைத் தூதரகங்களினால் மிகச் சொற்பமான சேவையே வழங்கப்படுவதனாலும், வெளிநாட்டிலுள்ள இலங்கைத் தொழிலாளர்களின் சிரமங்கள் தொடர்பில் ஆராய்வதற்காக ஒம்புட்சுமன் ஒருவரை நியமனம் செய்தல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 42/2022

கௌரவ ஹெக்டர் அப்புஹாமி,— ஆனவிழுந்தாவ ஈர நிலத்தைப் பாதுகாத்தல்,— சர்வதேச ரம்சார் சமவாயத்தின் மூலம் ஈர நிலமாக பெயரிடப்பட்டுள்ள ஆனவிழுந்தாவ ஈர நிலத்தை எதிர்கால சந்ததிக்காக பாதுகாப்பதற்கு துரித வேலைத்திட்டமொன்றை அரசாங்கம் உருவாக்க வேண்டுமென இப் பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 43/2022

கௌரவ ஹெக்டர் அப்புஹாமி,— புத்தளம் மாவட்டத்தின் கண்டல் தாவர சூழல் தொகுதியைப் பாதுகாத்தல்,— சூழல் சமநிலையைப் பாதுகாப்பதில் பெரும்பங்காற்றுகின்ற புத்தளம் மாவட்டத்தின் கண்டல் தாவரச் சூழல் தொகுதியினை எதிர்கால சந்ததிக்காக பாதுகாப்பதற்கு அரசாங்கம் துரித நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 44/2022

கௌரவ ஹெக்டர் அப்புஹாமி,— வெளிநாடுகளிலிருந்து நாடு திரும்புகின்ற இலங்கைத் தொழிலாளர்களை அவர்களது இல்லங்களில் தனிமைப்படுத்தலுக்கு உள்ளாக்குதல்,— கொவிட்-19 தொற்று நோய் காரணமாக வெளிநாடுகளில் தமது தொழில்களை இழந்து பெரும் துன்பகரமானதொரு காலப்பகுதியை கடந்து இலங்கைக்குத் திரும்புகின்ற வெளிநாடு வாழ் இலங்கைத் தொழிலாளர்களை தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்த அரசாங்கம் அறிமுகப்படுத்தியுள்ள முறையியல் இத் தருணத்தில் அவர்களால் தாங்க முடியாத பணச்சுமையாக உள்ளதால் உரிய காலப்பகுதியில் தமது இல்லங்களில் தனிமைப்படுத்தலுக்கு உள்ளாவதற்கு ஏற்ற வகையில் வேலைத்திட்டமொன்றை அரசாங்கம் உருவாக்க வேண்டுமென இப் பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா .47/2022

கௌரவ புத்திக பத்திறண,— பல்கலைக்கழக மற்றும் ஏனைய மூன்றாம் நிலைக் கல்வி நிறுவனங்களின் மாணவர்களால் எழுதப்படுகின்ற ஆய்வுக் கட்டுரைகளை சம்பந்தப்பட்ட அமைச்சுகளின் அபிவிருத்திப் பணிகளை இலக்குவைத்துத் தயாரித்தல்,— இலங்கையில் தற்போதுள்ள பல்கலைக்கழகங்களிலும் ஏனைய மூன்றாம் நிலைக் கல்வி நிறுவனங்களிலும் கல்வி பயிலும் மாணவர்கள்தம் கற்கைநெறிகளுடன் சம்பந்தப்பட்டதாக எழுதுகின்ற ஆராய்ச்சிக் கட்டுரைகளை, இலங்கையின் பொருளாதார, சமூக மற்றும் கலாசார விருத்திக்கு ஏற்புடையதாக எழுதவேண்டியமை முக்கியம்பெறுவதாலும், இக்கட்டுரைகளை மதிப்பீடு செய்யும் விரிவுரையாளர்கள் மற்றும் அத்தகைய ஆராய்ச்சிக் கட்டுரைகளுடன் சம்பந்தப்பட்ட அமைச்சுகளுக்கிடையில் சிறந்த இணைப்பாக்கத்தை ஏற்படுத்துவதற்காக ஒவ்வோர் அமைச்சு மட்டத்திலும் பொறுப்புவாய்ந்த அலுவலர் ஒருவரை நியமிக்கவேண்டி உள்ளதாலும், சம்பந்தப்பட்ட அமைச்சுகளின் எதிர்கால அபிவிருத்தி நடவடிக்கைகளைச் செயற்படுத்தும் போது நீண்டகால, நடுத்தரக்கால மற்றும் குறுகிய கால இலக்குகளை அடைந்துகொள்வதன் பொருட்டு அத்தகைய ஆராய்ச்சிக் கட்டுரைகளைப் பயன்படுத்த முறையான ஒரு வேலைத்திட்டத்தை அரசாங்கம் தயாரிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.48/2022

கௌரவ புத்திக பத்திறண,— உலகெங்குமுள்ள பௌத்த வணக்கஸ்தலங்களைப் பாதுகாக்க முன்னணி வகித்தல்,— உலகெங்குமுள்ள பௌத்தர்களின் வழிபாட்டுக்குரிய பௌத்த வணக்கஸ்தலங்களின் பாதுகாப்பை பலப்படுத்துவதற்கும், அனைத்துலக மட்டத்தில் பௌத்தர்கள் சார்பாக குரல் எழுப்பக்கூடிய வலுவான ஓர் அமைப்பை உருவாக்குவதற்குமென உலகெங்குமுள்ள பௌத்த மதத் தலைவர்களையும் அமைப்புகளையும் ஒருங்கிணைக்க, இலங்கை தலைமையேற்பதற்குப் பொருத்தமான வேலைத்திட்டமொன்றை அரசாங்கம் வகுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.49/2022

கௌரவ புத்திக பத்திறண,— முதியோர் பராமரிப்புச் சபைகளை நாடுபூராக விஸ்தரித்தல்,— வாழ்க்கையின் அந்திம காலத்தைக் கழித்துக்கொண்டிருக்கும் முதியோர்கள் தம் குடும்ப அங்கத்தவர்களாலும் சில நிறுவனங்களாலும் புறக்கணிக்கப்படுவதன் காரணமாக ஏற்படுகின்ற பல்வேறு அநீதிகள் குறித்து முறைப்பாடு செய்ய, சுகாதார அமைச்சில், முதியோர்களுக்கான தேசிய சபை மற்றும் தேசிய செயலகத்தின் கீழ் இயங்கிவரும் முதியோர் பராமரிப்புச் சபை வேலைத்திட்டத்தை மாகாண, மாவட்ட மற்றும் பிரதேச செயலக பிரிவு மட்டத்தில் விஸ்தரிக்கத் தேவையான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா, 50/2022

கௌரவ புத்திக பத்திறண,— இலங்கையின் உணவுக் கலாசாரத்தினை கற்றல், கற்பித்தல் செயன்முறையுடன் இணைத்தல்,— இலங்கையின் உணவுக் கலையானது, சுவையூட்டிகள் மற்றும் கலத்தல் கலை, சமையல் கலை, நிறமூட்டிக் கலை, உணவு வெட்டும் கலை உள்ளிட்ட பல அம்சங்களைக் கொண்டுள்ளதால், இலங்கையின் உணவுக் கலாசாரம் தொடர்பான கற்பித்தலை கற்பித்தல் செயன்முறைகள் ஊடாக எதிர்கால சந்ததிக்கு அளிப்பதன் மூலம் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு மக்களிடையே எமது நாட்டின் உணவுக் கலாசாரத்தை விரிவுபடுத்துவதோடு இலங்கையின் அடையாளத்தை உலக அளவில் நிலைநிறுத்துவதற்கு உகந்த வேலைத்திட்டமொன்றை அரசாங்கம் செயற்படுத்த வேண்டுமென இப் பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா, 51/2022

கௌரவ புத்திக பத்திறண,— இணையத்தின் ஊடாக விற்பனை செய்வதன் மூலம் மேற்கொள்ளப்படுகின்ற ஔடத தீத்தொழிலை ஒழித்தல்,— தற்போது இணையத்தின் ஊடாக தரமில்லாத ஔடதங்கள், மருத்துவ உபகரணங்கள் மற்றும் அழகு சாதனப் பொருட்களின் உற்பத்திகள் பெருமளவில் விற்பனை செய்யப்படுவதாலும், இந்த நிலைமை எமது நாட்டு மக்களின் உயிர் பாதுகாப்புக்கு பெரும் அச்சுறுத்தல் என்பதாலும், இந்த நிலைமையை ஒழிப்பதற்கு உகந்த வேலைத்திட்டமொன்றை அரசாங்கம் தயாரித்து செயற்படுத்த வேண்டுமென இப் பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா, 52/2022

கௌரவ புத்திக பத்திறண,— பாடசாலைப் பிள்ளைகளின் பெறுமதியை சமூகமயப்படுத்தல்,— பாடசாலைப் பிள்ளைகள் பெரும்பாலும் தொடர்புறுவோராகிய பெற்றோர், ஆசிரியர்கள், விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர்கள், பாடசாலை வேன் சாரதிகள் போன்ற நபர்களுக்கு பிள்ளைகளின் பெறுமதி தொடர்பாக சமூகவியல் மற்றும் உளவியல் செயன்முறைகள் மூலம் எளிமையான முறையில் தெளிவுபடுத்தி நாட்டினதும் சமூகத்தினதும் எதிர்கால நல்லிருப்புக்காக சமூகச் சவால்களுக்கு மத்தியில் பிள்ளைகளைப் பாதுகாக்க வேண்டிய வழிமுறைகள் தொடர்பில் விழிப்புணர்வூட்டும் தேசிய மட்டத்திலான வேலைத்திட்டமொன்றை அரசாங்கம் திட்டமிட்டு செயற்படுத்த வேண்டுமென இப் பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.53/2022

கௌரவ (திருமதி) ரோஹினீ குமாரி விஜேரத்ன,— இலங்கை கிராம உத்தியோகத்தர் சேவையை நிறுவுதல்,— அரசாங்கத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தியவாறும் கிராமிய மக்களுக்கு நெருக்கமாகப் பணியாற்றியவாறும் அளப்பரிய சேவையாற்றும் கிராம உத்தியோகத்தர்களுக்காக யாப்பொன்றைத் தயாரித்து "இலங்கை கிராம உத்தியோகத்தர் சேவை"யாக அதனை நிறுவுவதற்கு அரசாங்கம் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.54/2022

கௌரவ (திருமதி) ரோஹினீ குமாரி விஜேரத்ன,— உரித்துடையவர்களுக்கு சமுர்த்தி நிவாரணத்தை வழங்குதல்,— சமுர்த்தி பயனாளிகள் மற்றும் சமுர்த்தி நிவாரணம் கிடைக்கப்பெறாத குறைந்த வருமானம் பெறும் மக்கள் தொடர்பில் முறையான ஆய்வினை மேற்கொண்டு, உண்மையாகவே சமுர்த்தி நிவாரணம் கிடைக்கப்பெற வேண்டியவர்களைத் தெரிவு செய்து அவர்களுக்கு இதனை வழங்குவதற்குப் பொருத்தமான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.55/2022

கௌரவ (திருமதி) ரோஹினீ குமாரி விஜேரத்ன,— பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்புதல்,— கல்வியியற் கல்லூரிகளில் முறையான ஆசிரியர் பயிற்சியைப் பூர்த்தி செய்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கியவாறு பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்புவதற்குத் தேவையான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.56/2022

கௌரவ (திருமதி) ரோஹினீ குமாரி விஜேரத்ன,— சமுர்த்தி நிவாரணத்திற்குப் பதிலாக பசுமாடு ஒன்றினை வழங்குதல்,— கிராம மட்டத்தில் தெரிவு செய்யப்படும் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு சமுர்த்தி நிவாரணத்திற்குப் பதிலாக ஒரு பசுமாடு வீதம் வழங்கி அவர்களின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்குத் தேவையான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.57/2022

கௌரவ (திருமதி) ரோஹினீ குமாரி விஜேரத்ன,— ஏற்றுமதியின் ஊடாக நாட்டின் பொருளாதாரத்தை வலுவூட்டுதல்,— உள்நாட்டு உணவு உற்பத்தியை அதிகரிப்பதற்காக ஒரு விவசாய நாடு என்ற ரீதியில் விவசாயிகளுக்குத் தேவையான சகல உட்கட்டமைப்பு வசதிகளையும் சேவைகளையும் அரசாங்கத்தின் தலையீட்டுடன் வழங்கி இறக்குமதிக்குப் பதிலாக ஏற்றுமதி ஊடாக பொருளாதாரத்தை வலுவூட்டுவதற்குத் தேவையான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.58/2022

கௌரவ (திருமதி) ரோஹினீ குமாரி விஜேரத்ன,— இலங்கை கல்வி நிருவாக சேவையின் அலுவலர்களுக்கென நிலையான தேசிய இடமாற்றக் கொள்கையொன்றினைத் தயாரித்தல்,— இலங்கை ஆசிரியர் சேவை, இலங்கை அதிபர் சேவை உட்பட கல்வித் துறையின் பதவிகளுக்கான நிலையான இடமாற்றக் கொள்கையொன்று இன்றளவில் தயாரிக்கப்பட்டு கல்வி அமைச்சிடம் உள்ள போதிலும், இலங்கை கல்வி நிருவாக சேவைக்காக இதுவரையில் தேசிய இடமாற்றக் கொள்கையொன்று உருவாக்கப்படாத காரணத்தினால் மேற்படி அலுவலர்கள் விரக்திக்கு ஆளாகியுள்ளதாலும், மேற்படி நிலைமையினைத் தவிர்ப்பதற்காக இலங்கை கல்வி நிருவாக சேவையின் அலுவலர்களுக்காகவும் தேசிய இடமாற்றக் கொள்கையொன்றினைத் தயாரித்தல் மட்டுமன்றி ஆசிரியர்/அதிபர் இடமாற்ற தேசியக் கொள்கையினைச் செயற்படுத்துவதற்காகவும் அரசாங்கம் துரிதமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.59/2022

கௌரவ துஷார இந்துனில் அமரசேன,— கோழி முட்டை சார்ந்த கைத்தொழிலை மேம்படுத்தல்,— இன்றளவில் கோழித் தீவனத்தின் விலைகள் பாரியளவில் அதிகரித்துள்ளதன் காரணமாக கோழி முட்டை சார்ந்த கைத்தொழிலில் ஈடுபட்டுள்ளவர்கள் சிக்கல் நிலையை எதிர்கொண்டுள்ளதால் இந்த நிலைமையினைத் தவிர்த்து கோழி முட்டை சார்ந்த கைத்தொழிலை மீளவும் மேம்படுத்துவதற்கு அரசாங்கம் அவசியமான நடவடிக்கைகளை துரிதமாக மெற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

## 2022 ஆகஸ்ட் 23, செவ்வாய்க்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1473/2022

கௌரவ ரோஹண பண்டார,— புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) அநுராதபுரம் – அத்துலுநுவரவில் வசிக்கும் ஆட்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) அவர்களுக்கு இதுவரையில் சட்டரீதியான வசிப்பிடம் வழங்கப்படவில்லை என்பதை அறிவாரா என்பதையும்;

(iii) ஆமெனில், மேற்படி ஆட்களுக்கு சட்டரீதியான வசிப்பிடத்தை வழங்குவதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1732/2022

கௌரவ கிங்ஸ் நெல்சன்,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) பொலன்னறுவை மாவட்டத்தில் இதுவரை பதிவாகியுள்ள சிறுநீரக நோயாளர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி சிறுநீரக நோயாளர்களில், சிறுநீரக நோயாளர்களுக்கான மாதாந்த கொடுப்பனவு வழங்கப்படுகின்ற நோயாளர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) மேற்படி கொடுப்பனவைப் பெறுவதற்காக காத்திருப்போர் பட்டியலிலுள்ள நோயாளர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iv) காத்திருப்போர் பட்டியலிலுள்ள சிறுநீரக நோயாளர்களுக்கு மேற்படி கொடுப்பனவை துரிதமாக வழங்குவதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1949/2022

கௌரவ வசந்த யாப்பாபண்டார,— போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கண்டி குட் ஷெட் பேரூந்து நிலையத்தை நவீனமயப்படுத்தும் பணிகள் நிறைவு செய்யப்படும் திகதி யாதென்பதையும்;

(ii) அப்பேரூந்து நிலையத்தை நவீனமயப்படுத்துவதற்காக ஒதுக்கப்பட்டுள்ள நிதித் தொகை எவ்வளவென்பதையும்;

(iii) குட் ஷெட் பேரூந்து நிலையத்தை நவீனமயப்படுத்துவதற்கு ஒருங்கமைவாக கண்டி புகையிரத நிலையமும் நவீனமயப்படுத்தப்படுமா என்பதையும்;

(iv) ஆமெனில், அதற்காக ஒதுக்கப்பட்டுள்ள நிதித் தொகை எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) (i) கண்டி தீயணைப்புப் படை தலைமையகத்திற்கு அருகாமையில் சுரங்கப் பாதையொன்றை அமைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) அதற்காக செலவிடுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள நிதித் தொகை எவ்வளவென்பதையும்;

(iii) அச்சுரங்கப் பாதையை அமைப்பதற்குரியதாக சுற்றாடல் அறிக்கையொன்று பெறப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) அது தொடர்பாக கிரய-நலன் பகுப்பாய்வொன்று சமர்ப்பிக்கப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1961/2022

கௌரவ காமினி வலேபொட,— நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரையில் நீர்ப்பாசனம் மற்றும் நீரக வளமூலங்கள் முகாமைத்துவ விடயப்பொறுப்பு அமைச்சராகப் பணியாற்றிய ஒவ்வொரு அமைச்சரினதும் பெயர் மற்றும் பதவிக்காலம்;

(ii) மேற்படி ஒவ்வொரு அமைச்சரும் தமது பதவிக்காலத்தில் நியமித்துள்ள ஆலோசகர்களின் எண்ணிக்கை;

(iii) மேற்படி ஒவ்வொரு ஆலோசகரினதும் பெயர், வயது, கல்வி மற்றும் தொழில்சார் தகைமைகள்;

(iv) ஒவ்வொரு ஆலோசகருக்கும் செலுத்தப்பட்ட மாதாந்த சம்பளம், கொடுப்பனவுகள் மற்றும் வழங்கப்பட்டிருந்த ஏனைய வசதிகள்;

(v) மேற்படி ஒவ்வொரு ஆலோசகருக்கும் ஒப்படைக்கப்பட்டிருந்த பொறுப்புகள்;

(vi) மேற்படி ஒவ்வொரு ஆலோசகரும் மேற்கொண்டுள்ள வெளிநாட்டு விஜயங்கள், அவ்வாறு வெளிநாட்டு விஜயங்களை மேற்கொண்டமைக்கான காரணங்கள், அதற்காக செய்யப்பட்ட செலவு மற்றும் அதன் மூலமாக அமைச்சிற்கு கிடைக்கப்பெற்ற நன்மைகள்;

வெவ்வேறாக யாவை என்பதை அவர் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1996/2022

கௌரவ சமன்பிரிய ஹேரத்,— பிரதம அமைச்சர் மற்றும் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டில் தாபிக்கப்பட்ட ஊழல் ஒழிப்பு குழு செயலகம் சட்டபூர்வமானதொரு நிறுவனமா என்பதையும்;

(ii) இன்றேல், அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(iii) அரசியலமைப்பின் பிரகாரம் அவ்வாறானதொரு நிறுவனத்தை தாபிப்பதற்கான அதிகாரம் உள்ளதா என்பதையும்;

(iv) இன்றேல், அதற்குப் பொறுப்புக்கூற வேண்டியவர்கள் யாவர் என்பதையும்;

(v) மேற்படி குழுவின் கட்டமைப்பு மற்றும் அமைப்பு என்பன யாவை என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) 2015 முதல் 2017 ஆம் ஆண்டு யூன் மாதம் வரை மேற்குறிப்பிட்ட அலுவலகத்திற்கு செலவிடப்பட்டுள்ள தொகை எவ்வளவென்பதையும்;

(ii) அச் செலவுகளை ஏற்றுள்ள பிரிவுகள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி நிறுவனம் ஓர் அரச சார்பற்ற நிறுவனம் என்பதை அறிவாரா என்பதையும்;

(iv) ஆமெனில், மேற்படி அலுவலகத்திற்காக அரசாங்கத்தின் நிதியை செலவிட முடியுமா என்பதையும்;

(v) இன்றேல், மேற்படி நிதியை செலவிடுவதற்கு அங்கீகாரம் அளித்ததன் மூலம் அரச நிதி தவறாகப் பயன்படுத்தப்பட்டுள்ளதா என்பதையும்;

(vi) மேற் குறிப்பிட்ட அலுவலகத்துக்கென நிதி ஒதுக்கப்பட்டிருப்பின், அதற்குப் பொறுப்பேற்க வேண்டியவர்கள் யாவர் என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) ஊழல் ஒழிப்பு குழுவின் அங்கத்தவர்களுக்கு ஊதியங்கள் அல்லது கொடுப்பனவுகள் செலுத்தப்பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) ஆமெனில், அத் தொகை எவ்வளவு என்பதையும்;

(iii) அத் தொகை மீள அறவிடப்படுமா என்பதையும்;

அவர் மேலும் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2008/2022

கௌரவ (கலாநிதி) (மேஜர்) பிரதீப் உந்துகொட,— பிரதம அமைச்சர் மற்றும் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் சமூகப் பாதுகாப்புச் சபையில் ஏதேனும் முறைகேடு, முறையற்ற நியமனம், ஊழல் செயற்பாடு அல்லது சட்டத்திற்கு முரணான செயற்பாடு இடம்பெற்றுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அவை வெவ்வேறாக யாவை என்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு விடயம் காரணமாக அரசாங்கம் இழந்துள்ள நிதி, சொத்துக்கள் மற்றும் மனித வளங்களின் பெறுமதி வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

அவர் தெரிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி (அ) (i) இல் குறிப்பிடப்பட்டுள்ள செயற்பாடுகளுக்குப் பொறுப்புக்கூற வேண்டிய அலுவலர்களை இனங்காண்பதற்காக புலனாய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) மேற்படி புலனாய்வுகளின் மூலம் பொறுப்புக்கூற வேண்டிய அலுவலர்கள் இனங்காணப்பட்டிருப்பின், அவர்களுக்கெதிராக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி அலுவலர்களுக்கு எதிராக நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை எனில், அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(iv) அவர்களுக்கெதிராக எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

(v) எதிர்வரும் காலங்களில் இடம்பெறக்கூடிய இத்தகைய செயற்பாடுகளைத் தடுப்பதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2014/2022

கௌரவ கே. பீ. எஸ். குமாரசிறி,— வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015-2019 ஆம் ஆண்டு வரை சுயாதீன தொலைக்காட்சி நிறுவனத்தின் பணிப்பாளர் சபையின் உறுப்பினர்களாகவிருந்த பணிப்பாளர்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) அவர்களது பெயர்கள் யாவையென்பதையும்;

(iii) மேற்குறித்த காலப்பகுதியில் குறித்த நிறுவனத்தின் தொழிற்பாட்டுப் பணிப்பாளராகப் பணியாற்றியவரின் பெயர் யாதென்பதையும்;

அவர் தெரிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி தொழிற்பாட்டுப் பணிப்பாளருடன் தொடர்புடைய தனியார் நிறுவனமொன்றினால் தயாரிக்கப்பட்ட *"ஓவர் சோல்டர்ஸ்", "மஹாச்சார்ய யௌவனய", "சஞ்சாரே"* ஆகிய நிகழ்ச்சிகளை ஒளிபரப்புவதற்கு செலவு செய்யப்பட்ட பணத்தொகை வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(ii) சுயாதீன தொலைக்காட்சி நிறுவனத்தினால் தயாரிக்கப்பட்ட "சவனக் ரெஸ்" நிகழ்ச்சியினை ஒளிபரப்புவதற்குப் பதிலாக மேற்படி நிறுவனத்தின் அப்போதைய தலைவரின் சகோதரருடன் தொடர்புடைய நிறுவனமொன்றினால் தயாரிக்கப்பட்ட "தம்பதிவ" நிகழ்ச்சியினை ஒளிபரப்புவற்காக செலுத்தப்பட்ட பணத்தொகை எவ்வளவு என்பதையும்;

(iii) மேற்குறித்த முறைகேடான கொடுக்கல் வாங்கல்களுக்காக செலவு செய்யப்பட்டுள்ள மொத்த பணத்தொகை எவ்வளவு என்பதையும்;

(iv) அது தொடர்பில் பொறுப்புக்கூற வேண்டிய உத்தியோகத்தர்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

(v) பொறுப்புக்கூறவேண்டிய உத்தியோகத்தர்களிடமிருந்து மேற்படி பணத் தொகை அறவிடப்படுமா என்பதையும்;

(vi) இன்றேல், அவர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2024/2022

கௌரவ மதுர விதானகே,— தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் சிரம வாசனா நிதியத்தில் ஏதேனும் முறைகேடு, முறையற்ற நியமனம், ஊழல் செயற்பாடு அல்லது சட்டவிரோத செயற்பாடு இடம்பெற்றுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அவை வெவ்வேறாக யாவையென்பதையும்;

(iii) மேற்குறிப்பிடப்பட்ட ஒவ்வொரு செயற்பாட்டின் விளைவாகவும் அரசாங்கம் இழந்துள்ள நிதி, சொத்து மற்றும் மனித வளங்களின் பெறுமதி வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி (அ)(i) இல் குறிப்பிடப்பட்ட செயற்பாடுகளுக்குப் பொறுப்புக் கூறவேண்டிய அலுவலர்களை அடையாளம் காண்பதற்கென புலனாய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) பொறுப்புக்கூற வேண்டிய அலுவலர்கள் அடையாளம் காணப்பட்டிருப்பின், அவர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iii) அவர்களுக்கு எதிராக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாவிடின், அதற்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(iv) அவர்களுக்கு எதிராக எதிர்காலத்தில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(v) எதிர்காலத்தில் இடம்பெறக்கூடிய இத்தகைய செயற்பாடுகளைத் தடுப்பதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2041/2022

கௌரவ மர்ஜான் பளீல்,— பிரதம அமைச்சர் மற்றும் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரையில் விசேட பணிப் பொறுப்புகள் பற்றிய விடயப்பொறுப்பு அமைச்சராகப் பணியாற்றிய ஒவ்வொரு அமைச்சரினதும் பெயர் மற்றும் பதவிக்காலம்;

(ii) மேற்படி ஒவ்வொரு அமைச்சரும் தமது பதவிக்காலத்தில் நியமித்துள்ள ஆலோசகர்களின் எண்ணிக்கை;

(iii) மேற்படி ஒவ்வொரு ஆலோசகரினதும் பெயர், வயது, கல்வி மற்றும் தொழில்சார் தகைமைகள்;

(iv) ஒவ்வொரு ஆலோசகருக்கும் செலுத்தப்பட்ட மாதாந்த சம்பளம், கொடுப்பனவுகள் மற்றும் வழங்கப்பட்டிருந்த ஏனைய வசதிகள்;

(v) மேற்படி ஒவ்வொரு ஆலோசகருக்கும் ஒப்படைக்கப்பட்டிருந்த பொறுப்புகள்;

(vi) மேற்படி ஒவ்வொரு ஆலோசகரும் மேற்கொண்டுள்ள வெளிநாட்டு விஜயங்கள், அவ்வாறு வெளிநாட்டு விஜயங்களை மேற்கொண்டமைக்கான காரணங்கள், அதற்காக செய்யப்பட்ட செலவு மற்றும் அதன் மூலமாக அமைச்சிற்கு கிடைக்கப்பெற்ற நன்மைகள்;

வெவ்வேறாக யாவை என்பதை அவர் தெரிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2045/2022

கௌரவ குமாரசிறி ரத்னாயக்க,— நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மொனராகலை மாவட்டத்தில் அமைந்துள்ள சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களின் கீழ் வருகின்ற குளங்கள் மற்றும் அணைக்கட்டுகளின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) அக்குளங்கள் மற்றும் அணைக்கட்டுகள் அமைந்துள்ள பிரதேசங்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்குறிப்பிட்ட குளங்கள் மற்றும் அணைக்கட்டுகளில் 2015ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் புனரமைக்கப்பட்ட குளங்கள் மற்றும் அணைக்கட்டுகளின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(iv) மேற்படி குளங்கள் மற்றும் அணைக்கட்டுகளின் பெயர்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி (அ)(i) இல் குறிப்பிடப்பட்டுள்ள குளங்கள் மற்றும் அணைக்கட்டுகளில் புனரமைக்கப்பட வேண்டுமென தற்போது அடையாளங் காணப்பட்டுள்ள குளங்கள் மற்றும் அணைக்கட்டுகளின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) அவற்றுள் 2020 ஆம் ஆண்டில் புனரமைக்கப்பட்ட குளங்கள் மற்றும் அணைக்கட்டுகளின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(iii) அவற்றின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iv) 2021 ஆம் ஆண்டில் புனரமைப்புச் செய்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள குளங்கள் மற்றும் அணைக்கட்டுகளின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(v) அவற்றின் பெயர்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

---

## 2022 ஆகஸ்ட் 24, புதன்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

2062/2022

கௌரவ எம். டப்ளியு. டீ. சஹன் பிரதீப் விதான,— பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரையில் சட்டம் மற்றும் ஒழுங்கு பற்றிய விடயப்பொறுப்பு அமைச்சராகப் பணியாற்றிய ஒவ்வொரு அமைச்சரினதும் பெயர் மற்றும் பதவிக்காலம்;

(ii) மேற்படி ஒவ்வொரு அமைச்சரும் தமது பதவிக்காலத்தில் நியமித்துள்ள ஆலோசகர்களின் எண்ணிக்கை;

(iii) மேற்படி ஒவ்வொரு ஆலோசகரினதும் பெயர், வயது, கல்வி மற்றும் தொழில்சார் தகைமைகள்;

(iv) ஒவ்வொரு ஆலோசகருக்கும் செலுத்தப்பட்ட மாதாந்த சம்பளம், கொடுப்பனவுகள் மற்றும் வழங்கப்பட்டிருந்த ஏனைய வசதிகள்;

(v) மேற்படி ஒவ்வொரு ஆலோசகருக்கும் ஒப்படைக்கப்பட்டிருந்த பொறுப்புகள்;

(vi) மேற்படி ஒவ்வொரு ஆலோசகரும் மேற்கொண்டுள்ள வெளிநாட்டு விஜயங்கள், அவ்வாறு வெளிநாட்டு விஜயங்களை மேற்கொண்டமைக்கான காரணங்கள், அதற்காக செய்யப்பட்ட செலவு மற்றும் அதன் மூலமாக அமைச்சிற்கு கிடைக்கப்பெற்ற நன்மைகள்;

வெவ்வேறாக யாவை என்பதை அவர் தெரிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2074/2022

கௌரவ குணதிலக ராஜபக்ஷ,— பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) களுத்துறை மாவட்டச் செயலகத்தில் 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் ஏதேனும் முறைகேடு, முறையற்ற நியமனம், ஊழல் செயற்பாடு அல்லது சட்டவிரோத செயற்பாடு இடம்பெற்றுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அவை வெவ்வேறாக யாவையென்பதையும்;

(iii) மேற்குறிப்பிடப்பட்ட ஒவ்வொரு செயற்பாட்டின் விளைவாகவும் அரசாங்கம் இழந்துள்ள நிதி, சொத்து மற்றும் மனித வளங்களின் பெறுமதி வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி (அ)(i) இல் குறிப்பிடப்பட்ட செயற்பாடுகளுக்குப் பொறுப்புக் கூறவேண்டிய அலுவலர்களை அடையாளம் காண்பதற்கென புலனாய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) பொறுப்புக்கூற வேண்டிய அலுவலர்கள் அடையாளம் காணப்பட்டிருப்பின், அவர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iii) அவர்களுக்கு எதிராக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாவிடின், அதற்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(iv) அவர்களுக்கு எதிராக எதிர்காலத்தில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(v) எதிர்காலத்தில் இடம்பெறக்கூடிய இத்தகைய ஊழல் செயற்பாடுகளைத் தடுப்பதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2097/2022

கௌரவ எஸ். எம். எம். முஸ்ஸாரப்,— வனசீவராசிகள் மற்றும் வனவளங்கள் பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அம்பாறை மாவட்டத்தின் பொத்துவில் பிரதேச செயலகப் பிரிவில் கிராம உத்தியோகத்தர் பிரிவு பீ/17 இல் விவசாய நடவடிக்கைகளில் ஈடுபடும் மக்களின் பயிர்ச்செய்கைகள் தொடர்ச்சியாக காட்டு யானைகளினால் அழிக்கப்படுகின்றதென்பதையும்;

(ii) காட்டு யானைகளின் அச்சுறுத்தல் காரணமாக மேற்குறிப்பிட்ட பிரதேசங்களில் வாழ்கின்ற பாடசாலை மாணவர்கள் பாடசாலை செல்வதை விரும்பவில்லை என்பதையும்;

(iii) பிரதேசத்தின் யானை வேலிகள் காட்டு யானைகளினால் அழிக்கப்பட்டுள்ளன என்பதையும்;

(iv) யானை வேலியை அமைத்துத் தருமாறு உரிய உத்தியோகத்தர்களிடம் கோரியபோதிலும், இதுவரையில் அது நிறைவேற்றப்படவில்லை என்பதையும்;

(v) இதன் காரணமாக இம்மக்களுக்கு தமது பிரதேசங்களை விட்டு வேறு பிரதேசங்களுக்கு இடம்பெயர வேண்டிய நிலை உருவாகியுள்ளது என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) இது தொடர்பில் அமைச்சு மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவையென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2115/2022

கௌரவ இஷாக் ரஹுமான்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) அநுராதபுர மாவட்டத்திலுள்ள அரசாங்கப் பாடசாலைகளின் எண்ணிக்கை எத்தனையென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மேற்படி பாடசாலைகளில் கற்பிக்கப்படும் ஒவ்வொரு பாடத்திற்கமைவாக —

(i) அங்கீகரிக்கப்பட்ட ஆசிரியர்களின் எண்ணிக்கை;

(ii) தற்போது சேவையாற்றும் ஆசிரியர்களின் எண்ணிக்கை;

(iii) தற்போது காணப்படும் வெற்றிடங்களின் எண்ணிக்கை;

தனித்தனியாக எத்தனை என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) மேற்படி (ஆ) (iii) இல் குறிப்பிடப்பட்டுள்ள வெற்றிடங்களை நிரப்புவதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதை அவர் மேலும் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2262/2022

கௌரவ ரோஹினீ குமாரி விஜேரத்ன,— நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) இலங்கையில் தோட்டப்புறங்களில் வாழும் குடும்பங்களுக்கு வீட்டு வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு -

(i) இன்றளவில் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள்;

(ii) எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படவுள்ள நடவடிக்கைகள்;

யாவை என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2458/2022

கௌரவ பிரேம்நாத் சி. தொலவத்த,— போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ஒரு இலட்சம் கிலோமீற்றர்களை காபட் இட்டு அபிவிருத்தி செய்யும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் தற்சமயம் அபிவிருத்தி செய்யப்பட்டுள்ள வீதிகளின் நீளம் எவ்வளவு என்பதையும்;

(ii) வீதி அபிவிருத்தியின்போது பெரும்பான்மையான வீதிகளின் இருமருங்கிலுமுள்ள வடிகான்களை அபிவிருத்தி செய்யாமை பாரிய பிரச்சினையாக மாறியுள்ளது என்பதை அறிவாரா என்பதையும்;

(iii) வீதி அபிவிருத்திக்காக செலவின மதிப்பீடுகளைத் தயாரிக்கும் போது இவ்விடயம் பற்றி கவனம் செலுத்தப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2468/2022

கௌரவ றோஹண திஸாநாயக்க,— பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வரையறுக்கப்பட்ட எல்கடுவ பெருந்தோட்டக் கம்பெனிக்குச் சொந்தமான தேயிலைத் தொழிற்சாலைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) அத்தொழிற்சாலைகள் அமைந்துள்ள இடங்கள் யாவை என்பதையும்;

(iii) அவற்றுள் தற்போது இயங்கு நிலையிலுள்ள தொழிற்சாலைகள் மற்றும் இயங்காத நிலையிலுள்ள தொழிற்சாலைகள் பெயர் அடிப்படையில் வெவ்வேறாக யாவை என்பதையும்;

(iv) தொழிற்சாலைகள் இயங்கு நிலையில் இல்லாதிருப்பதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(v) தற்போது இயங்காதிருக்கும் தேயிலைத் தொழிற்சாலைகளைப் பயன்படுத்தி தேயிலை உற்பத்தியில் ஈடுபடுவதற்கு விண்ணப்பித்துள்ள விண்ணப்பதாரிகளின் பெயர்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) வரையறுக்கப்பட்ட எல்கடுவ பெருந்தோட்டக் கம்பெனியானது அதன் தேயிலைத் தொழிற்சாலைகளை தனியார் துறையினரிடம் ஒப்படைத்துள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அத்தொழிற்சாலைகளின் பெயர்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2566/2022

கௌரவ வடிவேல் சுரேஷ்,- பெருந்தோட்ட அமைச்சரைக் கேட்பதற்கு,-

(அ) (i) பதுளை மாவட்டத்தில் இன்றளவில் தனியார் நிறுவனங்களுக்கு குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டுள்ள அரச தோட்டங்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) மேற்படி தோட்டங்களில் அமைந்துள்ள தேயிலைத் தொழிற்சாலைகளின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(iii) மேற்படி தொழிற்சாலைகளுள் தற்போது செயற்பாட்டு நிலையிலுள்ள தொழிற்சாலைகளின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(iv) தற்போது செயற்படாத நிலையிலுள்ள தேயிலைத் தொழிற்சாலைகளின் இன்றைய நிலைமை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) தேயிலைத் தொழிற்சாலைகள் செயற்படாதுள்ளமையினால் தேயிலைக் கைத்தொழிற்துறை மீது பாதகமான தாக்கம் ஏற்படுகின்றதா என்பதையும்;

(ii) தற்போது செயற்படாத நிலையிலுள்ள தேயிலைத் தொழிற்சாலைகளை மீள இயங்க வைத்து தேயிலைக் கைத்தொழிற்துறையைக் கட்டியெழுப்புவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2571/2022

கௌரவ துஷார இந்துனில் அமரசேன,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தேசிய கல்வியியல் கல்லூரிகளில் ஒவ்வொரு மொழி மூலத்திற்கும் ஏற்ப நடத்தப்படும் பாடநெறிகளின் எண்ணிக்கை வெவ்வேறாக யாது;

(ii) மேற்படி பாடநெறிகளின் பெயர்கள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) கல்வியியல் கல்லூரி ஆசிரியர் பயிற்சிக்காக மாணவர்களின் பற்றாக்குறை காணப்படுவதை அறிவாரா;

(ii) ஆமெனில், மேற்படி பிரச்சினையைத் தீர்ப்பதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2580/2022

கௌரவ பீ.வை. ஜீ. ரத்னசேக்கர,— வர்த்தக, வாணிப மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையினால் இன்றளவில் அத்தியாவசியப் பொருட்களாக அறிவிக்கப்பட்டுள்ள பொருட்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

(ii) வர்த்தகர்கள் இன்றளவில் பெரும்பாலான பொருட்களின் விலைகளை எவ்வித கட்டுப்பாடும் இன்றி தான்தோன்றித்தனமாக அதிகரித்துள்ளதை அறிவாரா என்பதையும்;

அவர் இச்சபையில் தெரிவிப்பாரா?

(ஆ) (i) பொருட்களின் சந்தை விலையைக் கட்டுப்படுத்துவதற்கென அதிகாரசபை இன்றளவில் கடைப்பிடித்து வருகின்ற முறையியல் யாது என்பதையும்;

(ii) பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையினால் ஏற்புடைய சட்டம் முறையாக நடைமுறைப்படுத்தப்படாததை அறிவாரா என்பதையும்;

(iii) அவ்வாறாயின், அதற்கான ஏதுக்கள் யாவை என்பதையும்;

(iv) சந்தைச் சக்திகளின் அடிப்படையில் சந்தையில் பொருட்களின் விலைகள் தீர்மானிக்கப்படுவதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(v) அவ்வாறாயின், பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையின் பணிப்பொறுப்பு யாதென்பதையும்;

அவர் இச்சபையில் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?